விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU

NATIONAL TAMIL DAILY

ஆனி 13 றம்ழா 26 இதழ் 133

யாழ்ப்பாணம் புதன்கிழமை 27-6-84

RECEIVED 6-1984 PERIODICALS DIVISION LIBRARY

## சர்வதேச தமிழர் நிலையம்: நியூயோர்க் மாநாடு முடிவெடுக்கும்!

(நியூயோர்க்)

நியூயோர்க்கில் நடைபெறவுள்ள உலகத் தமிழ் மாநாடு எம்வரும் சனிக்கிமை ஆரம்பமாகவுள்ளது.

சர்வதேச தமிழர் நிலையம் அமைப்பது தொடர்பாக இந்த மாநாட்டில் முடிவெடுக்கப்படவுள்ளது.

அமெரிக்காவிலும் கனடாவிலுமுள்ள தமிழர்கள் ஏற்பாடு செய்துள்ள இந்தமாநாட்டில் தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் குறித்து விரிவாக ஆராயப்படவுள்ளது.

இலங்கைத் தமிழர் பிரச்னையே இம்மாநாட்டில் முக்கிய இடத்தை வகிக்குமென்று மாநாட்டு அமைப்பாளரான திரு. டபிள்யூ பஞ்சாட்சரம் தெரிவித்துள்ளார்.

இம்மாநாட்டில் இலங்கை தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபர் திரு. அ,அமிர்தலிங்கம் கலந்துகொள்ள இருந்த போதிலும் புதுடில்லியில் நடைபெறவிருக்கும் ஜே. ஆர்-இந்திரா பேச்சுவார்த்தை காரணமாக அங்கு செல்லவில்லை.

# மாநில சுயாட்சியா, மாகாண சபைகளா?

## பஞ்சலிங்கம் கடமையாற்றுவார்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்திற்கு புதிய அரசாங்க அதிபர் ஒருவரை அரசாங்கம் நியமனம் செய்யும்வரை, மேலதிகஅரசாங்கஅதிபர் திரு. எம் பஞ்சலிங்கம் அரசாங்க அதிபரக கடமை யாற்றவுள்ளார்.

யாழ். அரசாங்க அதிபரும் யாழ். மாவட்ட செயலாளருமாகக் கடமையாற்றிய திரு. தேவநேசன் நேசையா புல

(8ம் பக்கம் பார்க்க)

## ஜே.ஆர் இந்திரா சந்திப்பில் சுமுகமான முடிவுகள்

### அமைச்சர் லலித்,இந்தியத் தூதர் சத்வால் நாளை புதுடில்லி செல்கின்றனர்

(கே. ஜி. எம்.)

இந்தியத் தலைநகர் புதுடில்லியில் இவ்வார இறுதியில் இடம்பெறும் இலங்கை ஜனாதிபதி ஜே, ஆர். ஜெயவர்த்தன- இந்தியப்பிரதமர் திருமதி இந்திரா காந்தி சந்திப்பில், இலங்கைத் தமிழர் பிரச்னைகள் சம்பந்தமாக தீர்க்கமான முடிவு ஏற்படும் என்று அரசியல் அவதானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன மூன்றுநாள் விஜயத்தை மேற்கொண்டு எதிர்வரும் சனிக்கிழமை புதுடில்லி செல்கிறார். தேசிய பந்தோபஸ்து அமைச்சரும், பதில் பாதுகாப்பு அமைச்சருமான திரு. லலித் அத்துலத் முதலியும் நாளை வியாழக்கிழமை புதுடில்லிக்கு விஜயம் செய்கிறார். அதே நேரத்தில் தமிழர் விடுதலை கூட்டணி செயலாளர்நாயகம் திரு அ, அமிர்தலிங்கம் நியுயோர்க் தமிழ் மகாநாடு விஜயத்தை ரத்துச் செய்துவிட்டு புதுடில்லி சென்றுள்ளார். திரு. அ. அமிர்தலிங்கத்துடன் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரமும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலமும் புதுடில்லி சென்றுள்ளனர்.

இவ்வாறிருக்க இந்தியத் தூதுவர் திரு எஸ் ஜே எஸ். சத்வால் நாளை புதுடில்லி சென்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் ஆலோசகர் திரு. ஜி. பார்த்தசாரதியையும் பின்னர்,பிரதமர் திருமதி இந்திரா காந்தியையும் சந்திப்பார் என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. (8ம் பக்கம் பார்க்க)

## "பயங்கரவாதத்தை ஒழிக்க தனித்து நின்றால் முடியாது! சர்வதேச நாடுகள் உதவவேண்டும்"

### லண்டனில் ஜனாதிபதி ஜே. ஆர்.

(லண்டன்)

இலங்கை தனித்து நின்று பயங்கரவாதத்தை ஒழிக்க முடியாது என்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன லண்டனில் தெரிவித்துள்ளார்.

வடபகுதியில் பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்துக்கட்டுவதற்கு சர்வதேச அடிப்படையில் உதவியை நாடவேண்டிய நிலையிலுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

லண்டனில் நிருபர்கள் மத்தியில் ஜனாதிபதி உரையாற்றினார்.

அவர் மேலும் சொன்னதாவது:-

"தமிழ் பிரிவினைவாதிகளுக்கு அமெரிக்கா, பிரிட்டனில் நிதிசேகரிக்கப்படுகிறது, அத்

(8ம் பக்கம் பார்க்க)

## இலங்கை தூதரகத்தின் முன்னால் ஆர்ப்பாட்டம்!

(லண்டன்)

லண்டனிலுள்ள இலங்கை தூதரகத்துக்கு முன்னால், இலங்கையர்கள் பெருமளவில் அங்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுக்கு தமது அமைதியான எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்க்கிரட் தட்சரிடம் கையளிக்கும்படி மகஜர் ஒன்றையும் தூதரகத்திடம் கொடுத்தனர்.

மேற்கு நாடுகளில் தமது கையைப்பலப்படுத்தி, அவர்களின் உதவியைப்பெற்றுச்சிறுபான்மையினரை நசுக்க ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன முயல்கிறார் என்று அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்மொழி உபயோகம் உடன் அமுலுக்கு வருகிறது!

### யாழ். அரச அதிபர் தகவல்

(ஏ. பி. மாணிக்கம்)

"வடக்கு கிழக்குமாகணங்களில் அரசியல் அமைப்பின் தமிழ்மொழி உபயோகம் பற்றிய ஏற்பாடுகளை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவர முடிவு செய்யப்பட்டுள்ளது."

நேற்றுப் பிற்பகல் யாழ்-செயலகத்தில் நடை பெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் வைத்து அரச அதிபர் திரு. தேவநேசன்நேசையா மேற்குறிப்பிட்ட தகவலை வெளியிட்டார்.

யாழ்.மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோன் தலைமையில் யாழ் செயலகத்திலுள்ள அவரது பணிமனையில் இம் மகாநாடு நடைபெற்றது.

யாழ் மாவட்ட அமைச்சின் இணைப்பதிகாரியும், உதவிஅரசாங்க அதிபருமான எஸ். பி. பாலசிங்கம்,மேலதிகஅரசாங்க அதிபர் திரு. பி. எல் பற்றிக் யாழ். செயலக தலைமைக்காரியாலய பொறுப்பதிகாரியும் உதவி அரசாங்க அதிபருமான திரு. கி. கோபாலரட்ணம் ஆகியோரும் இம்மாநாட்டில் சமூகமளித்திருந்தனர்.

யாழ். மாவட்டத்தில் அதிகப்படியான ஊழியர்கள் நியமிக்கப்படாத போதிலும், இருக்கும் ஊழியர்களைக் கொண்டு சகல தரப்பிலும் தமிழ் மொழி நடைமுறைப்படுத்தப்படும் என்று அரசாங்க அதிபர் பத்திரிகையாளர் கேட்ட கேள்வி ஒன்றுக்குப்பதி

(8-ம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் கூலிப்படையினர் இலங்கைக்கு வரவில்லை!

### இந்தியாவில் வெளியான செய்திகளுக்கு அரசு மறுப்பு

(இ. கந்தசாமி)

பிரிட்டிஷ் கூலிப்படையினர் ராணுவத்தினருக்கு ஒரு வருடப் பயிற்சி அளிப்பதற்காக ஓமானிலிருந்து இலங்கைக்குச் சென்றுள்ளதாக இந்தியாவில் வெளியான செய்திகளை ராஜாங்க அமைச்சின் செயலாளரும், தகுதி வாய்ந்த அதிகாரியுமான திரு. டக்ளஸ் லியனகே மறுத்துள்ளார்.

பயங்கரவாதத் தடுப்பு நடவடிக்கைக்கு ஐம்பதுக்கு மேற்பட்ட இஸ்ரேலிய நிபுணர்கள் கெரில்லாப் பயிற்சி அளிப்பதற்காக இலங்கைக்குச் சென்றுள்ளதாகவும் பி.ரி.ஐ. செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரிட்டிஷ் கூலிப்படையினரும் இஸ்ரரலிய நிபுணர்களுடன் சேர்ந்து, ராணுவத்தினருக்கு பயிற்சிகளை அளிக்கப் போவதாகவும் மேலும் இந்தச்செய்திகள் தெரிவித்துள்ளன.

பிரிட்டிஷ் எஸ் ஏ எஸ் படையினர் இலங்கைக்கு அனுப்படப்டுவது சம்பந்தமாக, பிரிட்டனிடம் இந்தியள வெளிவிவகார அமைச்சு விக்கம் கேட்டதற்கு, பிரிட்டிஷ் அதிரடிப் படைக்கும் கூலிப்படைக்கும் தொடர்பில்லை என்றும், அது தனிப்பட்ட முறையில் இயங்குகிறதென்றும் அங்கிருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய வெளிவுறவு அமைச்சு இதுவரை இதுசம்பந்தமாக இலங்கையுடன் தொடர்பு கொள்ளவில்லை.

## "தமிழில் தொடர்புகொண்டால் தமிழிலேயே பதிலளியுங்கள்"

### அரச அலுவலர்களுக்கு சுற்றுநிருபம்

(யாழ்ப்பாணம்)

அரசியலமைப்பின் தமிழ் மொழி உபயோகம்பற்றிய ஏற்பாடுகளை அமுலாக்குமாறு யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா அனுப்பிவைத்துள்ள சுற்று நிருபம் ஒன்றில் கேட்டுள்ளார்.

யாழ். மாவட்டத்திலுள்ள சகல உள்ளூராட்சி-அரச நிறுவனத் தலைவர்கள், கூட்டுத்தாபன சபைத் தலைவர்கள், பிரிவு உதவி அரச அதிபர்கள், கிராமசேவைகர்களுக்கு நேற்று அனுப்பிவைத்துள்ள இந்த சுற்று நிருபத்தில் தமிழ் மொழி உபயோகம் தொடர்பாக விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

[illegible] செயலாளர் அரசாங்க அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்திலிருந்து சில பகுதிகள் இந்த சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. சில முக்கிய விடயங்களைக் கீழே தருகிறோம்:

எவராவது ஒருவர், அலுவலர் ஒருவரோடு தமிழ்மொழியில் தொடர்புகொள்வாராயின் அம்மொழியிலேயே அவருக்குப் பதில் வழங்கப்படவேண்டும்.

ஓர் உத்தியோகத்தர் தமிழ்

(8ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

WANTED

Blood for patient. Group - AB - (AB Negative) Urgently needed. Contact: Murugaiah, 232, Temple Road, Nallur. Phone: 24137 519

## தேவை

யாழ்ப்பாணத்தில் பிரசித்தி பெற்ற ஹோட்டலுக்கு மேலைத்தேசச் சாப்பாட்டுவகைகளும் கீழைத்தேய சாப்பாட்டு வகைகளும் சமைக்கத்தெரிந்த சமையல்காரர் தேவை. விண்ணப்பிக்கவும்: 145 பிரதான வீதி யாழ்ப்பாணம். 475

சிலிண்டர் பிளேற்றின் மெசினில் வேலைசெய்பவர் உடன் தேவை. சான்றிதழ்களுடன் தொடர்பு கொள்ளவும். ஸ்ரீலங்கா அச்சகம் 234. A, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 520

அனுபவமுள்ள கடைச்சல் இயந்திரத் தொழிலாளர் தேவை. போதிய அனுபவம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும், அல்லது நேரில் வரவும். ஸ்ரார், வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம். 510

## யாருடையது

திருநெல்வேலி கந்தர்மடம் பகுதியில் ஒரு தொகைப் பணத்தை தவறவிட்டவர் என்னுடன் 22655 இலக்க தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும். க. கனகசபாபதி. 509

## விற்பனைக்கு

லைற் இஞ்சின் (டீசல்) ஐஸ் பழவான் (டீசல்): கம்பனி; இடமும் உண்டு. 'கிருஸ்ணு' கிறீம் ஹவுஸ், தபாலக அருகாமை, கரவெட்டி. 504

உரும்பராய்ச் சந்தியிலிருந்து யாழ்ப்பாணம் போகும் பெரிய தெருப் பக்கமாகக் கால் மைல் தூரத்தில் குடியிருக்கக் கூடிய காணி கிணற்றுடன் இரண்டு பரப்பு விற்பனைக்கு உண்டு. நேரில் அல்லது கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும். தரகர் தேவையில்லை. க.கிருஷ்ண பிள்ளை, கொப்பிட்டி, முருகமூர்த்தி கோயிலடி, உடுவில், சுன்னாகம். 476

மிருசுவில் ஸ்ரேசனுக்கு முன்பாக பலவித பிரயோசனங்களுடனான 75 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: மல்ரி சேவிசஸ், 37 (351) மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம், 494

தொட்டிலடி சண்டிலிப்பாயில் 5பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு:- மல்ரி சேவிசஸ் 37,(351)மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 516

## சேவை

புதிதாக இயங்கிவரும் எமது சேவையின் மூலம் திருமண ஏற்பாடுகள் செய்துகொடுக்கப்படும். திருமணம் செய்ய விரும்புவோர் தங்களதுகுறிப்பு அடங்கிய முழுவிபரங்களுடன் எழுத்து மூலமோ/நேரிலோ தொடர்புகொள்க. M. இராஜமனோகரன், பிள்ளையார் கோவில், வடக்கு வீதி, பொலிகண்டி, வல்வெட்டித்துறை. 506

## வாடகைக்கு

யாழ். பெரியகடைக்கு அண்மையில் நவீன வசதிகளுடன் சிறு புதியபகுதி வீடு இருமாணவிகள், பெண்கள், இளம் தம்பதியினருக்கு உகந்தது. இல:- 142, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். போன்: 22335 514

## தவறிவிட்டது

இம்மாதம் 23-ம் திகதி சனிக்கிழமை அத்தியடி உப-தபாற்கந்தோருக்குமுன் D. R. 830 இலக்கமுடைய றலி சைக்கிள் தவறிவிட்டது. பதிலாக பிளேங்பிஜன் சைக்கிள் ஒன்று விடப்பட்டிருந்தது. றலி சைக்கிள் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் யாழ். பிரதம தபாற்கந்தோரில் சி. வைத்தீஸ்வரனுடன் தொடர்பு கொள்ளவும் சன்மானம் வழங்கப்படும். 515

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் இரண்டு டயரியும், ஒரு கணக்குக்கொப்பியும் சேர்ந்த ஒருபார்சல் தவறிவிட்டது. அதை கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சத்திர சந்தியில் அமைந்துள்ள C. S. K. கட்டடத்தில் இருக்கின்ற ஹாஜி அப்பாஸ் சன் கடையில் ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும். 517

## வெற்றுச் சாக்கு விற்பனை

4900 வெற்றுச் சாக்குகள் கேள்விப் பத்திரம் மூலம் விற்பனைக்குள்ளது. மீளளிக்கப்படாத ரூபா 5/- செலுத்திக் கேள்விப் பத்திரம் சங்க அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் வைப்புப்பணம் ரூபா 200/-செலுத்த வேண்டும். வெற்றுச் சாக்குகளைப் பிரதமசங்கத்தில் பார்வையிட்டுக் கொள்ளலாம்.
விண்ணப்ப முடிவு திகதி 10-7-1984.

**பொது முகாமையாளர்,**
பூநகரி ப. நோ கூ. சங்கம்,
522 பூநகரி.


**PHOTO STAT**
பிரதிகளுக்கு
**கொழும்பு ஸ்ருடியோ**
யாழ்ப்பாணம்



## Building Technological Institute
**கட்டிடத்தொழில் நுட்பவியல் நிறுவனம்**
(கட்டிடக் கலைஞர்களாலும் பொறியியலாளர்களாலும் நன்மதிப்பைப் பெற்ற ஒரே ஒரு நிறுவனம்)
136, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
**ஆரம்பம் 30 - 06 - 84 காலை 10-30 மணி**
1. DIPLOMA IN DRAUGHTSMAN SHIP
2. DIPLOMA IN QUANTITY SURVEYING
(City and Guilds London) (398)
ஆர்வம் உள்ள இருபாலாரும் அனுமதிக்கப்படுவார்கள்



## அரிய சந்தர்ப்பம்
★ COMPUTER PROGRAMMING
BASIC—COBOL
40 மணித்தியால செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.
★ I. D. P. M. (COMPUTER LONDON EXAM)
★ DIPLOMA IN HOTEL MANAGEMENT
O/L சித்தியடைந்த இருபாலாரும் சேரலாம், வெளிநாடு செல்வோர்க்கு குறைந்த காலத்தில்
★ FRENCH ★ GERMAN
★ ENGLISH கற்பிக்கப்படும்.
**மீண்டும் ஆரம்பம்: 30 – 06 – 84**
**JAFFNA TECHNICAL INSTITUTE**
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(றெயில்வே கடவை அருகாமை)



**45 வருடகால**
**நம்பிக்கைக்குரிய சேவையுடன்**
**26%**
**வட்டி வழங்கும்**
இலங்கையில்
மிகப் பழமையானதும்
யாழ்ப்பாணத்தில் தனது
சொந்த நிறுவனத்தில் இருக்கும்
ஒரேயொரு நிதிஸ்தாபனம்
**த பினன்ஸ் கொம்பனி லிமிட்டட்**
TFC
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம், தொலைபேசி: 23680
தலைமை அலுவலகம்
3-ம் மாடி, சிலிங்கோ ஹவுஸ், கொழும்பு
மற்றும் ஏனைய 14 கிளைகள் உண்டு.



## தாவரவியல்
புதிய வகுப்பு
ஆசிரியர்: திரு. சிவவீரசிங்கம்

| | சனி | ஞாயிறு |
|---|---|---|
| 85 | 10–15 | 10–15 |
| 86 | 11–15 | 11–15 |

ஆரம்பம்: 1–7–84
**நியூ கேம்பிரிட்ஜ்,** திருநெல்வேலிச் சந்தி
503



சுயவேலை வாய்ப்பு - பயிற்சி
## Diploma in Draughtsmanship
(வார — வார இறுதிப் பயிற்சி)
★ பயிற்சி — 6 மாதம்
★ O/L, A/L மாணவ மாணவிகட்கு ஏற்றது.
★ Drawing Board "T" Square
பயிற்சிக்கு வழங்கப்படும்
**ஆரம்பம்: 27 – 06 – 1984 காலை 10 மணி**
விபரங்கட்கு:
INSTITUTE OF ENGINEERING TECHNOLOGY
11B, மொம்சாக் கட்டிடம்,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(15 வருடஅனுபவம் வாய்ந்த தொழில் நுட்பநிறுவனம்)
502



## CITY AND GUILDS OF LONDON INSTITUTES
TELECOMMUNICATION TECHNICIANS COURSE
MAY / JUNE 1985
at
J. A. S. E. INSTITUTES,
றிம்மர் மண்டபம், வேம்படி றேட், யாழ்ப்பாணம்.
பயிற்சி ஆரம்பம்: 30–06–1984 (சனிக்கிழமை)
27-6-84 முதல் பதிவு செய்துகொள்ளலாம்
**T 1, T 2, and T 3 வகுப்புகள்**
நீண்டகாலத் தகுதியும் அனுபவமும் கொண்ட ஆசிரியர்களால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.
கடந்த மூன்று ஆண்டுகளாக பரீட்சையில் அதிகமான மாணவர்களின் சித்திக்கு பயிற்சியளித்த
ஒரே நிறுவனம் **J. A. S. E.**
ஏனைய பயிற்சி நெறிகள்
**C. E. I. PART I** ஆரம்பம்: 30–06–1984
**C. E. I. PART II** ஆரம்பமாகிவிட்டது.
சொற்ப இடங்கள் மட்டும் உண்டு.
உடன் தொடர்பு கொள்க.
B.A. 1984 டிசம்பர் பரீட்சைக்கான மீட்டல் வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன.
PITMAN'S SHORTHAND TYPEWRITING
தொடர்பு:
பதிவாளர்,
**J. A. S. E.**
றிம்மர் மண்டபம், வேம்படி றேட், யாழ்ப்பாணம்.


## ஈட்டு விற்பனவு விளம்பரம்
**யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்**

ஈடு வழ. இல: 1188.
யாழ்ப்பாணம் கலைப்புலவர் வீதி, முத்து கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம். —வழக்காளி

எதிராக

அச்சுவேலி வடக்கு, சித்தர் கந்தையா நல்லதம்பி. —எதிராளி

ஈடு 1188ம் வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ்க்காணும் ஆதனம் 1984ம் ஆண்டு ஜூலை மாதம் 27ம் திகதி வெள்ளிக்கிழமை (27-07-1984) காலை பத்து மணி தொடக்கம் அவ்வாதனத்துள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

ரூபா 29500/- வருடமொன்றுக்கு 6%வட்டியும், தீர்வைக்குப்பின் 5% வட்டியும் வழக்குச் செலவு 907-74 ஆனால் எதிராளி 1-5-83 வரையில் ரூபா 27000/- தீர்வைத் தொகையாலும் வழக்குச் செலவு தொகையால் இறுத்த ரூபா 500/-ம் கழித்து மிகுதித் தீர்வைத் தொகையும், வட்டியும் விற்பனைச் செலவும் கொடுக்கவேண்டி இருக்கிறது.

### ஆதன விபரம்

(1) வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்றிக் வலிகாமம் கிழக்குப் பகுதி அச்சுவேலிக் கோவில்பற்று அச்சுவேலி வடக்கிறை 'கொல்லை' நி. பர. 4. மேற்குப் பக்கத்தில் இருக்கும் கிணற்றில் பங்கும் இதற்கு எல்லை வடக்கு கிராமச்சங்கத்துக்குரிய ஆதனமும், கிழக்கு வெள்ளையன் பொன்னுக்குரிய ஆதனமும் தெற்கு ஒழுங்கையும், மேற்கு எஸ். கந்தையாவிற்குரிய ஆதனமும் இதன் பதிவு இலக்கம் 297/119.

(2) மேற்படி இறை "கொல்லை" நி. பர. 4½யும் அதற்குச் சேர்ந்தவையாவும் பிரிக்கப்பட்ட துண்டுக்கு எல்லை வடக்கு விநாயகமூர்த்தி பெண் சிவபாக்கியத்துக்குரிய ஆதனமும், கிழக்கு க. நல்லதம்பியின் ஆதனமும், தெற்கு 10½ அடி அகலமான ஒழுங்கை, மேற்கு தெரு இதடங்களும், இதன் பதிவு இலக்கம் K322/90

இந்த இரு துண்டுகளும் தற்போது நில அளவையாளர் R, J. Jeyaratnam 1974-05-25ம் திகதியிட்டு 100ம் இலக்கத்தில் தயாரித்த நிலஅளவைப்படத்தில் விபரிக்கப்பட்டுள்ளது.

"ஆனந்த-வாசா" த. கனகராஜா,
43, குமாரசாமி வீதி, (கோட்டு விற்பனை ஆணையாளர்)
கந்தர்மடம், யாழ்ப்பாணம். 512

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாஷிங்டன் பயங்கரவாத எதிர்ப்பு மகாநாட்டுக்கு சோவியத் கண்டனம்!

## "அமெரிக்க சார்புக்கொள்கைபரப்பும் நோக்கம்!"

### சர்வதேச பயங்கரவாதிகளுக்கு சோவியத் உதவுவதாக அமெரிக்க அமைச்சர் தகவல்

மாஸ்க்கோ, ஜூன் 26

**வாஷிங்டனில் சர்வதேச பயங்கரவாதத்துக்கு எதிராக அமெரிக்கா நடத்திய மகாநாட்டை சோவியத்யூனியன் கண்டித்துள்ளது. அம்மகாநாடு அமெரிக்க சார்புக் கொள்கை பரப்பும் நோக்கம் கொண்டது என்று அது தெரிவித்துள்ளது.**

சோவியத்யூனியனைத் திட்டமிட்டு எதிர்க்கவும், அமெரிக்க சார்புக்கொள்கைகளை மேலும் வலுப்படுத்துவதாகவுமே இச்சர்வதேச பயங்கரவாத எதிர்ப்புமகாநாடு விளங்கியது என்று சோவியத்தின் கண்டனத்தை வெளியிட்ட அந்நாட்டின் பத்திரிகையான 'டாஸ்' தெரிவித்தது.

வாஷிங்டனில் உள்ள 'ஜொனுதன் என்ற நிறுவனத்தின் கட்டிடத்தில் இச்சர்வதேச பயங்கரவாத எதிர்ப்பு மகாநாடு ஆரம்பமானது. இம்மகாநாட்டில் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் திரு. ஜோர்ஜ்ஷுல்ஸ் பிரதான உரை நிகழ்த்தினார். பிரிட்டன் உட்பட நேட்டோ நாட்டுப் பிரதிநிதிகளும் ஜப்பான், கனடா, நியூஸிலாந்து, ஆஸ்திரேலியா ஆகியவற்றின் பிரதிநிதிகளும் இம்மகாநாட்டில் கலந்து கொண்டனர்.

அமெரிக்க வெளிநாட்டமைச்சர் சோவியத்தைப் பலமாகக் கண்டித்து இம்மகாநாட்டில் நிகழ்த்திய உரையை 'டாஸ்' பத்திரிகை கண்டித்துள்ளது.

அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு.ஷுல்ஸ், சோவியத் யூனியனே சர்வதேச பயங்கரவாதத்தை ஊக்குவிக்கிறதென்றும் பயங்கரவாதிகளுக்கு கெரில்லா பயிற்சியுடன், ஆயுதங்களை வழங்குகிறதென்றும் குறிப்பிட்டார்.

சிரியா, லிபியா, வடகொரியா ஆகியன சர்வதேச பயங்கர வாதத்தின் கேந்திர நிலைகளாக இருக்கின்றனவென்றும் அவர் கூறினார்.

சர்வதேச பயங்கரவாதம் நன்கு பரவ முன்னர் அதனை முறியடிக்க வேண்டுமெனவும் அவர் அம்மகாநாட்டில் வேண்டுகோள் விடுத்தார்.

#### 'டாஸ்' பத்திரிகை

சோவியத் பத்திரிகையான டாஸ் அமெரிக்காவின் இச் சர்வதேச பயங்கரவாத மகாநாட்டைக் கண்டித்துள்ளது.

இம்மகாநாட்டில் சோவியத்துக் கெதிரான குற்றச்சாட்டுக்களை அப்பத்திரிகை ஆட்சேபித்திருப்பதுடன் இம்மகாநாடு முற்றிலும் அமெரிக்க ஏகாதிபத்தியக் கொள்கையை சர்வதேசரீதியில் வலுப்படுத்த நடத்தப்பட்ட தொன்று என்று கருத்து வெளியிட்டுள்ளது.

இதேவேளை அம்மகாநாட்டில் சர்வதேச பயங்கர வாதத்தை ஒடுக்க அதில் கலந்து கொண்ட நாடுகளிடையே உடன்பாடு காணப்பட்டபோதிலும் எத்தகைய நடவடிக்கைகள், பயங்கர வாதத்துக்கெதிராக எடுக்கப்படுமென்று எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (கி)

# வாஷிங்டனில் 3-வது இந்து ஆலயம்

வாஷிங்டன், ஜூன் 26

அமெரிக்காவின் தலைநகரான வாஷிங்டனில் புதிய இந்து ஆலயம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆலயத்தின் குட முழுக்கு நேற்று இடம்பெற்றது.

'சிவாவிஷ்ணு' ஆலயம் என இது பெயர் சூட்டப்பட்டுள்ளது.

கணபதி, முருகன், சிவன், விஷ்ணுபோன்ற வழிபாட்டு மூர்த்திகள் இந்தஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளன. இவ்வாலயம் வாஷிங்டனில் கட்டப்பட்ட மூன்றுவது இந்து ஆலயமாகும்.

சுமார் நான்கு லட்சம் இந்தியர்கள் அமெரிக்காவில் வாழுகின்றனர். இவர்கள் பலரின் முயற்சியாலேயே இந்த ஆலயங்கள் இங்கு கட்டப்பட்டுள்ளன. இவை தவிர அமெரிக்காவின் ஒவ்வொரு முக்கிய நகரங்களிலும் ஒரு 'இந்து ஆலயம்' கட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (கி)

## முதலாம் உலகப்போரின் பின்னர்

# வளைகுடாயுத்தம் பெரும் காலாட்படை யுத்தமாக வெடிக்கும்!

## அமெரிக்கப் பாதுகாப்பமைச்சர் எச்சரிக்கை!!

வாஷிங்டன், ஜூன் 26

''முதலாம் உலகப்போரின் பின்னர் பெரும் 'காலாட்படை' யுத்தம் ஒன்று ஈராக் ஈரான் ஆகியவற்றுக்கிடையிலான வளைகுடாப் போரில் வெடிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.''

இவ்வாறு அமெரிக்கப் பாதுகாப்பமைச்சர் திரு. கஸ்ப்பர் வெய்ன்பேக்கர் எச்சரித்துள்ளார்.

திரு. பேக்கர், இவ்விருநாடுகளும் தமது எல்லைப்பகுதிகளில் சுமார் ஐந்து லட்சம் துருப்புக்களைக் குவித்து வைத்துள்ளன என்றும் இக்குவிப்பே பெரும் காலாட்படையுத்தமொன்றுக்கு வழிவகுப்பதாகவும் தெரிவித்தார்.

வளைகுடா யுத்தம் பரவும் பட்சத்தில் அமெரிக்கா, சவுதி அரேபியா, குவைத் ஆகிய நாடுகளுக்கு இராணுவ தளபாட உதவிகளை வழங்குமென்றும் அவர் குறிப்பிட்டார்.

ஏற்கனவே அமெரிக்க இவ்விரு நாடுகளுக்கும் இராணுவ சாதன உதவிகளை வழங்கியிருப்பதையும் திரு. பேக்கர் எடுத்துக் கூறினார். (கி)


## பற்றீசியன் இன்ஸ்ரிரியூட்ஸ்

கீழ் குறிப்பிட்டுள்ளவைகளுக்கு செய்முறை போதனு முறை உட்பட எமது அடுத்த வகுப்புகள் எதிர்வரும் ஞாயிறு 1-07-1984ல் ஆரம்பமாகின்றன.

★ மோட்டார் மெக்கானிஸம் (MOTOR MECHANISM)
★ கொம்பியூட்டர் புரோகிறுமிங் (COMPUTER PROGRAMMING)
★ எலக்ரோனிக்ஸ் டிப்புளோமா (DIPLOMA IN ELECTRONICS-CITY and GUILDS PART II)
★ மெக்கானிக்கல் எஞ்சினியறிங் வேர்க்ஸ் (MECHANICAL ENGINEERING WORKS)
★ எலெக்ரிக்கல் எஞ்சினியறிங் வேர்க்ஸ் (ELECTRICAL ENGINEERING WORKS DIPLOMA)

} 6 மாத கால பகுதி நேர வகுப்பு

★ படம் வரைதல் — பில்டர்ஸ் குவான்ரிற்ரி உட்பட (DRAFTMAN SHIP — INCLUSIVE OF BUILDERS QUANTITIES) } 6 மாதகால கிழமையில் 5 நாள் வகுப்பு
★ கடைச்சல் யந்திரம் பயிற்சி (LATHE OPERATION) } 4 மாத காலம்
★ வெல்டிங் (ARE WELDING) } 3 மாத காலம்
★ றெவ்றிஜறேஷன் (REFRIGERATION) 3 மாத காலம்
★ மின் இணைப்பு (ELECTRICAL WIRING) } 1 மாத காலம்
★ நீர் குழாய் இணைப்பு (PLUMBING) 1 மாத காலம்

இவ் நிறுவனத்தில் மாத்திரம் விற்கப்படும் விண்ணப்பப் பத்திரத்தில்

**28—06—1984க்கு முன் விண்ணப்பிக்கவும்.**

ஒவ்வொரு வகுப்பிலும் 15 பேர் மட்டுமே சேர்க்கப்படுவர். இவ் 15 பேரும் விண்ணப்பம் முதல் கிடைக்கும் வரிசையிலேயே சேர்க்கப்படுவர். ஆகவே உடன் விண்ணப்பித்து ஏமாற்றத்தை தவிர்க்கவும்.

பதிவாளர்,
**பற்றீசியன் இன்ஸ்ரிரியூட்ஸ்**
59, சென் பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.


# 'நேட்டோ' நாடுகளின் புதிய செயலாளர் நாயகம்!

லண்டன், ஜூன் 26

'நேட்டோ' நாடுகளின்புதிய செயலாளர் நாயகமாக முன்னுள் பிரிட்டன் வெளிநாட்டமைச்சரான காரிங்டன் பிரபு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

காரிங்டன் பிரபு முன்னுள் பிரிட்டிஷ் பாதுகாப்பமைச்சராகவுமிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த ஒருவரே இதுவரை காலமும் 'நேட்டோ' செயலாளர் நாயகமாக இருந்தார். இவர் இப்பதவியை கடந்த 13 வருடங்கள் வகித்தார்.

புதிய செயலாளர் காரிங்டன் பிரபு, வெளிவிவகார மற்றும் பாதுகாப்பு விவகாரங்களில் மிகவும் அனுபவம் மிக்க ஒருவராக இருக்கின்றூர். (கி)

## வேள்வி உற்சவம்

(புலோலி)

தும்பளை நெல்லண்டை தோட்டக்கடவை நரசிங்க வைரவர் ஆலய வருடாந்த வேள்வி உற்சவம் இம் மாதம் 30ம் திகதி நடைபெறு மென அறிவிக்கப்பட்டுள்ளது.

## சிறுவன் பரிதாப மரணம்

(யாழ்ப்பாணம்)

அனிஞ்சல் மரத்தில் காய் பறிக்க ஏறிய 14 வயது சிறுவன் மரத்திலிருந்து விழுந்து மரணமானூர்.

உடுப்பிட்டியைச் சேர்ந்த த. வி. பகிரதன் என்பவரே [illegible]. யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானூர். (க)

# கைதடி அகதியை நெதர்லாந்து பெண் மணந்தார்

(சாவகச்சேரி)

கைதடி அகதிகள் முகாமில் தங்கியிருந்த அகதி ஒருவரை இம்முகாமிற்கு விஜயம்செய்த நெதர்லாந்து தேசத்து இளம் பெண் ஒருவர் மணமுடித்துள்ளார். இத்தம்பதிகள் தற்போது நெதர்லாந்துக்குச் சென்றுள்ளனர்.


# BASIC ENGLISH

எங்களுக்கு விளம்பரம் தேவையில்லை:
இஃதோர் அறிவித்தல் மட்டுமே
**பயிற்சிக்காலம்: 3 மாதம்**
விரிவுரையாளர்: கந்தையா நவரேந்திரன்
ஆரம்பம்: 5—7—84
**கட்டணம்: ரூபா 100/-**
நேரசூசிகை: திங்கள் பி. ப. 3-00—4-30
வியாழன் பி. ப. 3-00—4-30

**கன்ராபியா இன்ஸ்டிடியூட்**
21, மெயின் வீதி, யாழ்ப்பாணம்
போன்: 24201


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

மனப்பக்குவம் உள்ளவர்கள் கருத்துக்களைப் பரிமாறுகிறார்கள்; சாதாரண மனிதர்கள் சம்பவங்களைக் குறித்து அலசுகிறார்கள்; அற்பமனிதர்களே மற்றவர்களைக் குறித்துப் பேசுகிறார்கள்.

— ஒருபெரியவர்

## நமதுநோக்கு

# லெபனானில் சமாதானம் சாத்தியமா?

இன்றைய உலகில் லெபனானைப் போல் துன்பம் நிறைந்த நாடுவேறு எதுவும் உண்டா?

தீயதை நலமாக மாற்றுதற் பொருட்டு நஞ்சை உண்டதெய்வம் சாபக் கேடே உருவெடுத்தாற் போல் நலிவுறும் நாட்டுக்கு உதவ முன்வராதா? இந்தப் பிரார்த்தனை நாகரிக உலகுக்கு மட்டுமல்ல நன்மையே விரும்பும் நல்லவர் எல்லோரின் உள்ளத்தில் ஊற்றெடுக்க வேண்டும்.

முப்பது லட்சத்துக்கு அதிகமான சனத்தொகை கொண்ட அரபு தேசத்தில் பத்து வருடமாக யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது; இந்தக் காலத்தில் இரண்டு தடவை இஸ்ரேல் கடும் போர் இங்கு நடத்தியது உலகறிந்த விடயம்: முதற்தடவை (1978) மும்முரமாக நடந்த சண்டையில் சிரியா தன் துருப்புக்களை அனுப்பி லெபனானுக்கு இயன்ற உதவி அளித்தது.

இரண்டாவது சண்டையில் (1982) இஸ்ரேல் தொடர்ந்து நாட்டைத்தாக்கியபோது, அமைதிகாக்கும் பணியென்ற போர்வையில் அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் ஒருபடை அனுப்பி இதில் தலையிட்டமை நிலைமையை மோசமாக்கியது.

வீறுகொண்ட இஸ்ரேல் அங்கு தங்கியிருந்த பலெஸ்தீன விடுதலை இயக்கத்தை (பீ. எல். ஓ) வெளுத்து வாங்கிற்று. பீ. எல். ஓ. இருந்த இடம் விட்டு தலைநகரான பெய்ரூட்டு தனது தலைமையகத்தை மாற்ற நேரிட்டது.

இஸ்ரேலின் திமிர்பிடித்த நடவடிக்கைகளுக்கு அத்திபாரம் எங்கிருக்கிறது என்பதை எவருக்கும் விளக்கத் தேவையில்லை.

தெற்கு லெபனானில் நிலைகொண்ட இஸ்ரேல் ராணுவம் அங்கு சுமுகமாக வாழ முடியவில்லை; இடம் பொருள் ஏவல் குன்றி ராணுவமுதுகெலும்பு வளைந்து அரசியல் ஸ்திரத்திலும் பலவீனமடைந்தது.

இந்தப் பாதகமான சூழ்நிலையிலும் இஸ்ரேலும் அதன் பரிவாரங்களும் லெபனானின் ஒற்றுமை கெட்ட சீரழிந்த நிலை காரணமாகத் தமது தீவிர போக்கை கைவிடவில்லை.

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் லெபனானில், கிறீத்தவ அரசியல் கட்சிகளும் அவற்றை எதிர்க்கும் இதர கட்சிகளும் இராணுவத் தலைவர்களின் ஆதிக்கத்துக்கு அடிமைப்பட்டிருப்பதால் லெபனான் ஒரு தேசம் என்ற ஒருமைப்பாடு என்றும் காணுமோ என்ற அச்சம் இருக்கவே செய்யும்.

இந்தப்பயங்கரம்நிறைந்த சூழ்நிலையில் சமாதான தூதுவராக இறங்கியிருப்பவர் சிரிய உப ஜனாதிபதி ஷீப்டல் ஹாலிம் கடாம் அவர்கள்.

உள்நாட்டுப் போரை உடனடியாக நிறுத்தி, பகைவர் என்ற ரீதியில் போராடும் பலதரப்பட்ட இராணுவக் குழுக்கள் மத்தியில் ஒழுங்கை நிலைநாட்டி, ஒற்றுமைப்படுத்த லெபனானின் அரசியல் தலைவர்களும் சிரிய உயர் மட்டப் பிரதிநிதிகளும் எத்தனிக்கின்றனர்.

ஒரே நாட்டில் வாழும் பல இனத்தவர் மதத்தவர் தற்கொலைக்குச் சமமான போருக்குப் பலியாகின்றனர். இதனை நடத்தும் பல திறப்பட்ட இராணுவக் குழுவினர். தாமெல்லாம் தமது நாட்டையே அழிக்க முயல்கின்றனர் என்ற உண்மையை உணர முடியாத நிலை பெரும் வேதனைக்குரியது.

உண்மை அடிப்படையானதென்றாலும் இதனைச் சிக்கல்படுத்த வெளிநாடுகளின் தலையீடு தாராளமாக இருந்து வருகிறது: வல்லரசுகள் தூரத்திலிருந்துபார்த்துக் கொள்ளவில்லை. முஸ்லிம் சமூகத்தின் நன்மை என்ற உண்மையான கருத்தும் துர்ப்பிரயோகம் செய்யப்படுகிறது; அரபு நாடுகள் பலவீனப்படுவதை ரஷ்யா அனுமதிக்க விரும்பாது; எந்தநாட்டிலும் உள்ளிட்டுத்தனது காரியத்தைக் கைப்பற்ற ஆளணி உண்டென்று அகங்காரம்கொண்டிருக்கும் 'குட்டி' இஸ்ரேல் இலகுவில் வெளியேறும் என்று நம்புவதற்கில்லை.

ஒற்றுமை உருவாகுதற்கு வலதுசாரி கிறித்தவ இராணுவ குழுவினர் தலைவன், இஸ்ரேலுக்கு ஆதரவான தளபதி ப்வாடி ப்ரெம் என்ன கருத்துக் கொண்டிருக்கிறாரென்பது முக்கியம்.


ஒருவருக்கொருவர் எதிராகக் கொலையிட்டுநாட்டைக் குட்டிச்சுவராக்காமல் நாட்டின் இராணுவத்தின் அதிகாரத்தைப் பரவலாக்க ஒத்துக்கொள்ள வேண்டும்; அல்லது தேசிய பாதுகாப்புப்படையில் ஒவ்வொரு பிரிவினருக்கும் தமது தனித்துவத்தை இழக்காதவகையில் அதிகாரம் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும்.

இவ்வித ஒற்றுமை அரும்பத் தொடங்கினாலே லெபனானில் இஸ்ரேலின் அட்டகாசம் அகால முடிவு எய்தும்.

இதனைத்தடுக்க இஸ்ரேல் பகீரதப் பிரயத்தனம் செய்யும்; இந்தச் சாபக்கேட்டுக்கு இலக்கான லெபனானில் நாமெல்லோரும் நல்ல பாடம் படிக்க வேண்டும்.

இலங்கையும் ஒரு லெபனானாக மாறுமோ என்ற அச்சம் தெரிவித்தவர்கள் ஜனாதிபதி தொடக்கம் எதிர்கட்சித் தலைவர்கள் பலர்.

# பண்டிதமணி அவர்களும் பழைய நினைவுகளும்



[பண்டிதமணியின் 86-ம் பிறந்ததினத்தையொட்டி திரு. பஞ்சாட்சரம் அவர்கள் பண்டிதமணி கூறிய-சம்பந்தப்பட்ட சில நிகழ்ச்சிகளை நினைவுகூர்கிறார்]

### காந்தியடிகள் வருகை

மகாத்மா காந்தியடிகள் இருமுறை யாழ்ப்பாணம் வந்தவர். ஒருமுறை அவரை வரவேற்றுப்பாரிய கூட்டம் நடந்தது. காந்தியடிகளின் பேச்சை மொழி பெயர்க்க நியமிக்கப்பட்டவர் திரு. எம். எஸ். இளையதம்பி அவர்கள். இங்கே பிரபலமான படிப்பாளி அவர். வெகுபிரசித்தமானவர் மொழிபெயர்ப்பும் நடந்தது கொண்டிருக்கும் போது காந்தியடிகள் அக்கூட்டத்தில் கதர் விற்றுக்கொண்டிருந்த ஒருவரை நோக்கினார்; அவர் மொழிபெயர்த்தாலோ என காந்தியடிகள் விரும்பினார். கதருடையில் இருந்த அவரை சிலமயிர்களாலான குடுமி அலங்கரித்தது. காந்தியடிகளின்விருப்பத்தைப் பூர்த்திசெய்ய அவர் மேடைக்கு வந்தார். இந்த ஆள் எங்கே மொழிபெயர்க்கப் போகிறது' என்று சபையோர் தம்முட் பேசிக்கொண்டார்கள். இவரில் விஷயமில்லாமல் காந்தியடிகள் மொழிபெயர்க்க அழைக்கமாட்டார் என்று எனக்குப்பக்கத்திலே இருந்த மகாலிங்கசிவம் அவர்கள் சொன்னார். மொழிபெயர்ப்பும் நன்றாக நடந்தது. ஆனால் மொழிபெயர்க்க வந்த அம் மனிதரின் பெயரோ ஊரோ எங்களுக்குத்தெரியாது. மற்ற நாள் பத்திரிகையில் மொழி பெயர்த்தவர் சக்ரவர்த்தி இராசகோபாலச்சாரியார் என்றிருந்தது.

### பெரியபுராண சூசனம்

நாவலர் பெரிய புராண சூசனம் காரைக்காலம்மையார் சரித்திரத்துடன் நின்றுவிட்டது. அப்பணியை பண்டிதமணி அவர்கள் தொடர்ந்து நிறைவேற்ற வேண்டுமென்பது கொழும்புத்துறை தவமுனிவர் யோகர் சுவாமிகளது சிஷ்யர்கள் விருப்பம். இதற்குப் பண்டிதமணி அவர்கள் "பெரியபுராண சூசனம் எழுதிய நாவலர் பெருமான் காரைக்காலம்மையார் சரித்திரத்துக்கு மேலே எழுத ஆறு முறை முயன்றும் அவரால் முடியவில்லை. திருவருட்சம்மதமில்லை போலும். நாவலர் பெருமானால் இயலாததை நாம் எவ்வாறு செய்யமுடியும். என்று கூறி "இணக்கமின்மை தெரிவித்தார். யோகர் சுவாமியும் பண்டிதமணியின் கருத்துக்குமதிப்பளித்தார்.

### மகானுக்கு வணக்கம்

மகாத்மாகாந்தி அடிகள் மதித்த ஒருபெரியார் பண்டித மதன் மோகன் மாளவியா அவர்கள். பெரிய கல்விமான் ஒழுக்க சீலர். தினசரி சிவபூசா துரந்தார்.

சைவசித்தாந்தசரபம் சிவஸ்ரீ ஈசான சிவாசாரியாரைக் காசியில் சந்திக்கும் ஒரு சந்தர்ப்பம் மாளவியா அவர்களுக்கு ஏற்பட்டது. இவர்களுடைய சம்பாஷணையில் சைவ வினாவிடை பற்றிய பேச்சு எழுந்தது. "இலங்கையில் நாவலர் என்ற பெரியார் ஒருவர் இருந்தார். அவர் தமிழகத்திலும் பல தொண்டு புரிந்தவர், பலநூல்களை எழுதியவர். அவற்றுள் ஒன்று சைவவினாவிடை உருவத்தில் சிறிய அப்புத்தகம் அறிவுப்பெருக்கில் உயர்ந்தது. அந்நூலில் முதலாவது வினா உலகத்துக்குக் கருத்தா யாவர்? விடை: 'சிவபெருமான்' என்பது. என்றுகூறி ஈசானசிவாச்சாரியார் நாவலரைப்பற்றிக் கூறினார். ஒரு வினாவிலும் விடையிலும் நாவலர் பெருமானின் முயற்சியைக் கேட்டுக் கொண்ட மாளவியா எழுந்து நின்று நாவலர் பிறந்த யாழ்ப்பாணத்தை நோக்கி 'அந்த மகானுக்கு வணக்கம்' என்று சொல்லி வழிபட்டார் என்று இக்கதையை ஈசான சிவாச்சாரியர் அவர்களிடமே பண்டிதர் ஐயா கேட்டதாகச் சொல்வார்.

### லோச் செல்லப்பா

தென்மராட்சியில் மிகவும் பிரசித்தி பெற்றவர் மட்டுவில் லோச் செல்லப்பா அவர்கள். மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாசாலைக்கு ஊர் மனேஜராக (லோக்கல் மனேஜர்) இருந்தவர். அவ்வித்தியாசாலையில் 1925ஆம் ஆண்டு அளவில் பண்டிதர் ஐயா அவர்களை கொண்டு காவிய பாடசாலை நடத்தினவர். அக்காவியப் பாடசாலையிற் படித்துச்சித்தி பெற்றவர்களுக்கு சேர் பொன். இராமநாதன் அவர்கள் தலைமையில் பரிசில் வழங்குவதற்கும் பாரிய கூட்டம் நடைபெற ஒழுங்கு செய்தவர். திரு செல்லப்பா அவர்களைப் பற்றி பண்டிதர் ஐயா இப்படிக்

(5ம் பக்கம் பார்க்க).

### அருணாசலம் - பஞ்சாட்சரம்

# "பயங்கரவாதத்தை ஒழிக்க ஒரு நாளைக்கு ரூ. $2\frac{1}{2}$ கோடி அரசுக்கு செலவு!"

## பிரதிஅமைச்சர் கூறுகிறார்

(கொழும்பு)

'பயங்கரவாத'த்தை ஒழிப்பதற்காக ஆயுதப்படைகளைப் பயன்படுத்துவதற்காக ஒரு தினத்துக்கு இரண்டு கோடி 50 ஆயிரம் ரூபாய் ஒதுக்க வேண்டியநிலை ஏற்பட்டிருக்கின்றதாம்.

உள்ளூராட்சி, வீடமைப்பு பிரதிஅமைச்சர் திரு. பி. ஸி. இம்புலான கூறியதாக 'திவயின' செய்தி வெளியிட்டிருக்கின்றது.

இவ்வாறு அரசு செலவு செய்யும் ஒவ்வொரு சதமும் பொதுமக்களின் பாதுகாப்பிற்காகவே பயன்படுகின்றது என அவர் கூறினார்.

பில்கிரியாவில் பிலியன்கடவர மாவுகாவத்த என்ற இடத்தில் இடம்பெற்ற ஒரு வீடமைப்புத்திட்ட அங்குரார்ப்பண விழாவில் கலந்துகொண்டு உரைநிகழ்த்தும் போதே திரு. இம்புலான இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில், முன்னைய அரசு மக்களை மோட்சத்துக்கு அழைத்துச்செல்வதாக வாக்களித்தது என்றும் ஆனால் மரவள்ளிமரங்களின்கீழ் காணும் மண்ணைத் தின்பதற்கும், லாவுலு, ஹபரல மரக்காய்களையும் கிழங்குகளையும் பிட்டவித்துச்சாப்பிடவும் நிலைமைகள் ஏற்பட்டது என்றார். மக்கள் மகிழ்ச்சியாக இருப்பார்களானால் எமது நோக்கமும் அதுதான், மக்கள் மகிழ்ச்சிக்கான நாட்டின் அபிவிருத்தியை அழித்தொழிப்பதற்கான முயற்சிகள் நடைபெற்றுவருவது தெரிகின்றது. இனக்கலவரங்களை உருவாக்கி, தீயிட்டு எமது தேசிய சொத்துக்களை நாசமாக்கினார்கள். எமது இளைஞர்கள்28,000பேருக்குமேற்பட்டவர்களுக்குவேலையில்லாமல் போயிற்று லட்சக்கணக்கான ரூபாய்பணம்நஷ்டஈடாகக் கொடுக்கப்பட்டது.

நாம் நாசமாக்கவேண்டியது, அழித்தொழிக்கவேண்டியது தமிழ் மக்களையல்ல, நாசகார சக்திகளை,பயங்கரவாதிகளையே அழித்தொழிக்கவேண்டும்" என்று அவர் கூறினார்.

# சித்திரத் தேரேறி வருகின்றவன்

— கீழ்கரவை கி. சிவநேசன் —

ஆறு தலை கொண்ட ஆறுமுகன்
அஞ்சுதலை நீக்கி ஆட்கொள்பவன்
ஆறு படைகளில் குடி கொண்டவன்
ஆனை முகனிற்குத் தம்பி அவன்

புள்ளி மயிலேறும் அழகன் அவன்
வள்ளி தெய்வானை மணாளன் அவன்
தெள்ளு தமிழ் தந்த குமரன் அவன்
தேவர் குறை தீர்த்த தெய்வம் அவன்

சித்திரத் தேரேறி வருகின்றவன்
சினங்கொண்டு அசுரரை அழித்திட்டவன்
பக்தர்கள் தொழுதேத்தக் காட்டு மலைப்
பதிதன்னில் குடி கொண்ட இறைவன்
அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கசிப்பு' உற்பத்தியைத் தடுக்க யாழ். அரச அதிபர் மகாநாடு!

## உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் கசிப்பு ஒழிப்பு நடவடிக்கை

(புலோலி)

கசிப்பு உற்பத்தி, விற்பனையை யாழ் மாவட்டத்தில் தடுப்பதற்கான உத்தரவை யாழ் அரசாங்க அதிபர் விடுத்துள்ளார். உதவி அரசாங்க அதிபர்கள் இது சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பணிக்கப்பட்டுள்ளனர்

யாழ் அரசாங்க அதிபரின் அலுவலகத்தில் அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா தலைமையில் இதுகுறித்து மகாநாடொன்றும் நடாத்தப்பட்டது. யாழ் மாவட்டத்தில் கசிப்பு உற்பத்தி விற்பனை அதிகரித்து வருவதினால் காலக்கிரமத்தில் பொது மக்களின் உயிர்களுக்கு ஆபத்து ஏற்படுவதுடன் இளைஞர்களும், போதைப் பழக்கத்திற்குஆளாகிவிடும் அபாய நிலை தோன்றியுள்ளதினால் கசிப்பு உற்பத்தியைத் தடுக்க உடன் நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று இலங்கை பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. கே. நடராசா வேண்டுகோள் விடுத்தார்.

இம் மகாநாட்டில் யாழ் மாவட்டத்திலுள்ள சகலஉதவி அரசாங்கஅதிபர்களும், திணைக்களத் தலைவர்களும், பொலிஸ், கலால் இலாக்கா அதிகாரிகளும் சமூகம் அளித்திருந்தனர். கசிப்பு உற்பத்தியைக் கட்டுப்படுத்துவது பற்றி இம் மகாநாட்டில் நீண்டநேரம்ஆராயப்பட்டது. கசிப்பு உற்பத்தியாளர்கள் பணத்திற்காகச் சமுதாயத்தை பலியிட முயலுகின்றார்கள் என்றும் இது மிகவும் அபாயகரமான நிலை என்றும் சுட்டிக் காட்டப்பட்டது.

தற்போது கிராமம், கிராமமாகக் கசிப்பு வியாபாரம்வேகமாக ஆதிக்கம்பெற்று வருகின்றதென்றும் இதனால் நாளாந்தம் பல அப்பாவி உயிர்கள்பலியாவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது என்றும் இலங்கைப் பனை அபிவிருத்திச் சபை தலைவர் திரு. கே. நடராசா தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் கசிப்பு ஒழிப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும், தொண்டர் இயக்கங்கள், கிராமப் பிரமுகர்கள், மதப் பிரமுகர்கள் ஆகியோர்களையும் ஒன்றிணைத்துத் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதென்றும் இம் மகா நாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

கசிப்பு உற்பத்தி, விற்பனையில் ஈடுபட்டுள்ளவர்களின் பெயர் பட்டியல்களைத் தயாரித்து உதவி அரசாங்க அதிபர்களிடம் சமர்ப்பிக்கும் பொறுப்பை யாழ் மாவட்டத்திலுள்ள தெங்குபனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்றுள்ளன.

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கைதடி, நாவற்குழிப் பகுதிகளில் தொண்டர் ஸ்தாபனங்களின் முயற்சியைத் தொடர்ந்து சுமார் இருபது கசிப்புஉற்பத்தியாளர்கள் கசிப்பு உற்பத்தியைக் கைவிட்டுள்ளனர் என்று இந்த மகாநாட்டில் கலால் இலாக்கா உதவி ஆணையாளர் திரு. ஏ. ஆர். ராஜு தெரிவித்தார்.

இதனை இதர கசிப்பு உற்பத்தியாளர்களும் பின்பற்ற வேண்டுமென்றுவேண்டுகோள் விடுத்த அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா கசிப்பு உற்பத்தியைக் கைவிட்டவர்களுக்குப் பாராட்டைத் தெரிவித்துக் கொண்டார். (கி)

# ''ஐக்கிய நாணயச் சங்க மத்திய விற்பனவு நிலையம் யாழ். நகரில் வேண்டும்''

(பண்டத்தரிப்பு)

''கைப்பணி உற்பத்தித் துறையிலும், எமது மாவட்ட மூலவள உற்பத்தித்துறையிலும் ஈடுபட்டுள்ள ஐக்கிய நாணய சங்கங்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கும், விற்பனை செய்வதற்கும் வசதி செய்யும் வகையில் ஐக்கிய நாணய சங்கங்களின் சமாஜத்தின் மத்திய விற்பனை நிலையம் ஒன்று யாழ். நகரில் திறக்கப்பட வேண்டும். இந்த நிலையம் சகல பகுதி மக்களுக்கும் வசதியாக கைப்பணி, மற்றும் விவசாய மூலவள உற்பத்திப் பொருட்களின் களஞ்சியமாகவும் விற்பனை நிலையமாகவும் யாழ். நகரில் அமைய வேண்டும்'' என்று கோரும் முக்கிய பிரேரணையொன்று எதிர்வரும் 30-ம் திகதி சனிக்கிழமை முற்பகல் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ள யாழ்.மாவட்ட ஐக்கிய நாணய சங்கங்களின் சமாஜத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

சமாஜத்தலைவி திருமதி வேதவல்லி கந்தையா தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் மேற்கண்ட பிரேரணை மண்டைதீவு பனம்பொருள் உற்பத்தியாளர் ஐக்கிய நாணய சங்கத்தினால் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இக்கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்படவுள்ள இதர முக்கிய பிரேரணைகள் பின்வருமாறு:

''கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள ஐக்கிய நாணய சங்கங்களினதும் சங்க உறுப்பினர்களினதும் உயர்வையும் முன்னேற்றத்தையும் கருத்திற்கொண்டும் தொழில் ஊக்குவிப்பைக் கருத்திற் கொண்டும் ஐக்கிய நாணய சங்கங்களிடையே ஒருமைப்பாட்டை வளர்க்கவும் விற்பனை முறையிலும் பண்டமாற்று முறையிலும்சங்கங்களிடையேவிற்பனை பரிமாற்றங்களை செய்ய சமா

(8-ம் பக்கம் பார்க்க)

# கிராமசேவை அலுவலர்கள் பொறுப்பின் முக்கியத்துவம்

[யாழ்ப்பாணம்]

''கிராம சேவை அலுவலர்கள் தங்கள் கடமையைச் சரிவரச் செய்யவேண்டும். அப்படி செய்யாவிடில் பொது மக்கள் அரசாங்கத்தின்மேல்தான் பழி சுமத்துவார்கள்.''

யாழ் மாவட்ட செயலாளரும் யாழ் அரசாங்க அதிபருமான திரு. தேவநேசன் நேசையா, கிராம சேவை அலுவலர் மத்தியில் பேசுகையில் அறிவுறுத்தினர்.

திரு. தேவநேசன் நேசையா தமது பதவியிலிருந்து விலகி, புலமைப்பரிசில் பெற்றுச் செல்வதை ஒட்டி, யாழ் மாவட்ட கிராம சேவை அலுவலர்கள் அவரது சேவையைப் பாராட்டுமுகமாக பிரிவுபசார வைபவம் நடாத்தினர்கள்.

குருநகரில்உள்ள ஹோட்டல் ஒன்றில் இப்பிரிவுபசார வைபவம் யாழ் மாவட்ட கிராம சேவை அலுவலர் சங்கத் தலைவர் திரு. ஒப்பிலாமணி தலைமையில் நடைபெற்றது.

திரு. தேவநேசன் நேசையா தொடர்ந்து பேசுகையில், அரசாங்கத்தின் முக்கிய ஊழியர்களாக விளங்குபவர்கள் கிராம சேவைஅலுவலர் என்றும், அரசின் அத்திவாரமே கிராம சேவை அலுவலர் என்றும் சொன்னர்.

பொதுமக்கள் தங்கள்பிரச்னைகளை அவை எந்த வகையில் ஏற்பட்டாலும் முதலில் கிராம சேவை அலுவலரேயே சந்திக்க வேண்டி இருக்கிறது. ஆதலால் பொதுமக்கள் பாதிக்கபடாமல் இருக்க சகல உதவி ஒத்தாசைகளையும் செய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

யாழ் அரசாங்க அதிபராகத் தான் கடமையாற்றிய காலங்களில் கிராம சேவை அலுவலர்அளித்தஒத்துழைப்புக்கும் திரு. தேவநேசன் நேசையா பாராட்டுத் தெரிவித்தார்.

மற்றும் பல கிராம சேவை அலுவலர்கள், யாழ் அரசாங்க அதிபரின் சேவையைப்பாராட்டிப் பேசினர்.

யாழ் மேலதிக அரசாங்க அதிபர்கள் திரு. எம். பஞ்சலிங்கம், திரு. எஸ். எஸ். தர்மபாலன், திரு. பி. எல். பற்றிக் மாவட்ட அமைச்சின் இணைப்பு அதிகாரியும் உதவி அரசாங்க அதிபருமான திரு எஸ்.பி.பாலசிங்கம்,யாழ் செயலக பொதுசன தொடர் அதிகாரியும் உதவி அரசாங்க அதிபருமான திரு சண்முகசுந்தரம் திருமதி தேவநேசன் ஆகியோரும் இவ்வைபவத்தில் சமூகமளித்திருந்தனர். (மா)

## பண்டிதமணி அவர்களும்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கூறுவார்.

''வாதம் இல்லாத இடத்திலேயே கூட வாதம் வருவிக்கத் தக்கவர்கள் சட்டத்தரணிகள் என்று நாவலர் எழுந்தார் என்ற கட்டுரையில் குறிப்பிட்டுள்ளேன். சட்டக்கல்லூரியைக்கண்டறியாத செல்லப்பா அண்ணர், வாதம்உள்ள இடத்திலேயே கூட வாதம் இல்லாமற் பேசக்கூடிய சட்டவல்லுநர். இதனால் இவர் ஊர் அப்புக் காத்து. சட்டத்தரணிகள் யாவரும் இவருக்கு நல்ல மடக்கம். செல்லப்பா அண்ணரின் கூரிய சட்ட விவேகம் அவரைலோச் செல்லப்பா ஆக்கி விட்டது. அவரது வீடே ஒரு பெரிய நீதிமன்றம் போலக் காட்சியளிக்கும்.''

### செந்திநாதையர்

காசிவாசி மகான் செந்திநாதையர் அவர்களைப்பற்றி எழுதும் போது ''மகான் செந்நாதையரவர்கள்நாவலர் பெருமானின் வலக்கரம். மகான் காசி வாசி செந்திநாதையரவர்கள் உத்தமதானபுரம் போன்ற ஸ்மார்த்த இடங்களிலே பிறக்காமல், குப்பிழானிற் பிறந்தது நாம் செய்த தவமேயாகும்.

குப்பிழான் யாழ்ப்பாணத்தில் ',தலைநிமிர்ந்து விளங்குவதொரு திருப்பரங் குன்றம்'' என்கிறார்கள்.

### ஹாஸ்யம்

பண்டிதர் ஐயா அவர்கள், பேச்சில் எழுத்தில் கதைகளைப் புகுத்தி ஹாஸ்யமாக விஷயங்களை ஆழப்பதியவைப்பதுண்டு. நாவலர் மண்டபத்தில் ஒரு கூட்டத்தில் பண்டிதர் ஐயா பேச்சு; இடையில் ஒருகதை: ''ஒருஊரில் ஒரு ஓவசியர் இருந்தார். கூலிக்காரருக்குப் போதிய சம்பளம் கொடுப்பதில்லை கூலிக்காரர் ''ஐயா! இரவு பகலாக மொங்கானைத் தூக்கிப் போட்டுக் கஷ்டப்பட்டு வேலை செய்கிறோம். சம்பளம் கூட்டவேண்டும் என்றார்கள். ஓவசியர் அவர்களைப் பார்த்து, 'நீங்கள் மொங்கானைத் தூக்குவதற்குத் தான் சம்பளம் போடுவதற்குச் சம்பளம் இல்லை. தூக்கிய மொங்கானை எப்படியும் போடத் தானே வேண்டும்'' என்றார். சபையில் உள்ளவர்கள் வயிறு குலுங்கச் சிரித்தார்கள். சிரிப்பொலி அடங்கச் சில நிமிடங்கள் சென்றன. பேச்சுத் தொடர்ந்தது. ஒருவர் இடைபிடையே சிரித்தார். விசாரித்த போது பிரபலமான ஒரு ஓவசியர் அவர் என்பது தெரியவந்தது. ஓவசியர்க் கதையை ஓவசியராலே தான் கூடுதலாகச் சுவைக்க முடியும்!

ஹாஸ்யமான கதைகள் மூலமும் நல்லறிவு ஊட்டிவரும் பண்டிதர் ஐயா அவர்கள் எண்பத்தாறுவது வயதில் இன்று காலடி எடுத்து வைக்கிறார்கள். அவர்கள் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து, நமக்கு வழிகாட்ட [illegible] இறைவன் [illegible] டிகளை இறைஞ்சுவோமாக.

## இருதயவலி பொறுக்காது தற்கொலை

(யாழ்ப்பாணம்)

இருதயவலி தாங்கமுடியாமல் வேதனைப்பட்டு வந்தவர். நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்துகொண்டார்.

நீர்வேலியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை வைத்திலிங்கம் (50 வயது) என்பவரே தற்கொலை செய்தவராவர்.

யாழ். மரணவிசாரணை அதிகாரி க.கேசவன் நேற்று மரண விசாரணை நடத்தினர்.

நீண்டகாலம் இந்த வலியினல் பாதிக்கப்பட்டுவந்த இவர் முதல் மதுபானம் அருந்திவிட்டு, பின் நகசுத்திராவகம் அருந்தினர்என்று விசாரணையில் கூறப்பட்டது.

விசாரணை முடிவில் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (க)

## நயினையில் அமுதசுரபியின் அன்னதானம்

(நயினதீவு)

அருள்மிகு நயினை ஸ்ரீநாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் நாளை 28ந் தேதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. அம்பிகை அடியார்களின் வசதியை முன்னிட்டு வழமை போல் அமுதசுரபி அன்னதான சபையினர் அன்னதானம் வழங்குவதற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்துள்ளனர். கொடியேற்றத் தினத்தன்றும், 7ம் திருவிழாவில் இருந்துதெப்பத் திருவிழாவரையும் அன்னதானம் செய்யப்படும்.

# சுகாதார அமைச்சர் கிளிநொச்சி விஜயம்

(கிளிநொச்சி நிருபர் கே.வி.கே.திருலோகமூர்த்தி)

கிளிநொச்சி அரசினர் ஆஸ்பத்திரி அபிவிருத்தி சபையால் நிறுவப்படவுள்ள 'எக்ஸ்ரே' பிரிவு கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவத்தில் கலந்துகொள்ளும் பொருட்டு சுகாதார அமைச்சர் டாக்டர் ரஞ்சித் அத்தபத்து எதிர்வரும் 30ம் திகதி சனிக்கிழமை காலை கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்வார்.

சுமார் நாலு லட்சம் ரூபா செலவில் அமையவுள்ள'எக்ஸ்ரே' பிரிவிற்கான கட்டிடத்தை மாவட்ட வைத்திய அதிகாரியும் ஆஸ்பத்திரி அபிவிருத்திச் சபைத் தலைவருமான டாக்டர் பி. நவரெத்தினராசா தலைமையிலான ஆஸ்பத்திரி அபிவிருத்திச் சபை நிர்வாகிகள் கட்டிக் கொடுக்க முன்வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே ஆஸ்பத்திரி அபிவிருத்தி சபையினர் சுற்றுமதில் ஒன்றையும் நிறுவி உள்ளனர்.

சுகாதார அமைச்சர்டாக்டர் ரஞ்சித் அத்தபத்துவுடன் கிராமியத் தொழிற்துறை அமைச்சர் திரு.எஸ் தொண்டமானும் வருகை தருவார் [illegible] எதிர் பார்க்கப்படுகிறது.

# ஸ்ரீ சித்திவிநாயகர் சாந்திக மகோற்சவம்

வண். கிழக்கு சுந்தர்மடம் ஸ்ரீசித்திவிநாயகர் ஆலயத்தில் சாந்திக மகோற்சவம் கடந்த 17ம் திகதி ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்றுவருகிறது.

கடந்த வருடம் மே மாதம் நிகழ்ந்த வன்செயலினல் தீக்கிரையான இரதம் நிதிப்பற்றுக்குறையினல் பூரணமாகத் திருத்தி அமைக்கமுடியாதநிலையில், இன்று புதன்கிழமை இரதோற்சவம் நடைபெறுகிறது.

எரிக்கப்பட்ட இத்தேரை திருத்தி அமைக்க, தேர்த்திருப்பணி வேலைகளை ஆரம்பிக்க சைவமக்கள் பெருமளவில் உதவவேண்டும்.

அகண்ட சச்சிதானந்த சுத்த சாட்குண்ய பிரணவஸ்வரூப தான்தோன்றி மூர்த்தியாகிய ஸ்ரீ சித்தி விநாயகப்பெருமானுக்கு உற்சவம் ஆரம்பமான காலம்தொட்டு தினமும் விசேட அபிஷேக ஆராதனைகளும், திருவுலாவும் மாலைவேளையில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. நாளை வியாழக்கிழமை காலை அஷ்டோத்திர சதசங்காபிஷேகமும்,தீர்த்தோற்சவமும் மாலையில் உள் வீதி திருவிழாவும் நடைபெறும். உற்சவங்களை பிரம்மஸ்ரீ பரமேஸ்வரக் குருக்கள் சோமாஸ்கந்தக் குருக்கள்சிறப்புடன் நடத்திவருகின்றனர்.

—பக்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய பலன்

மாதம்—ஆனி
திகதி—13 (27-5-1984)
வாரம்—புதன்
திதி—திரயோதசி பகல் 10-32ன் மேல் சதுர்த்தசி
நட்சத்திரம்—ரோகிணி இரவு 8.19 வரை

மேடம்: அன்னியர்களின் மத்தியில் அதிகம் பழக வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகலாம் வயிற்றுக்கோளாறுகளுக்கு இடமுண்டு உணவு விடயத்தில் அதிகம் கவனம் செலுத்தவும்.

இடபம்: கடமையாற்றும் இடத்தில் சிறப்பான இடம் கிடைக்கும் புதிய கண்டுபிடிப்புகளில் அதிக ஆர்வம் பிறக்கும் தூரத்துச்செய்தியொன்று பலன்தரும்.

மிதுனம்: வாழ்க்கையில் புதிரானநிலை தென்படும் எதிலும் தாக்க மனப்பான்மை உருவாகும் சினேகிதர் வழியால்கவலைகள் தோன்றக்கூடும்.

கடகம்: வசதிகள் பெருகும் வரவிலும் திருப்தி ஏற்படும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த விடயமொன்று உங்களுக்குச் சாதகமான முடிவைத்தரும்.

சிங்கம்: அதிர்ஷ்டகரமான தினம் மனைவாழ்வில் மகிழ்ச்சி தென்படும் சுபகாரியமொன்றும் இடம்பெறலாம் நன்மையான நாள்.

கன்னி: ஏமாற்றத்தின் தாக்குதலால் அவதிப்படுவீர்கள் பூமிப் பிணக்குகளால் கவலை தோன்றக்கூடும் தொழில் புரியும் இடத்தில் சூழ்ச்சிகள் உருவாகும் பொறுமை நன்று.

துலாம்: குடும்பப் பிரச்னைகளில் சுமுகமானநிலை தென்படலாம் சுற்றுடலிலும் வேண்டியதைச் சாதிக்கக்கூடிய செல்வாக்குப்பெருகும் இன்று பொன்னுன நாள்.

விருச்சிகம்: விபத்துக்கு இடமேற்படும் எதிலும் நிதானத்துடன் நடந்து கொள்ளவும் பல வழிகளிலும் பணம் செலவாகும் சிலர் கடன்படவும் நேரிடலாம்.

தனுசு: தாம்பத்திய வாழ்வில் ஒற்றுமை மலரும் காதலர்களாயின் இன்பசூழ்நிலை தென்படும்பெற்றோர்களாயின் ஆதரவும் கிடைக்கும் தொழிலிலும் வெற்றியுண்டு.

மகரம்: பயன்தரும்பிரயாணமொன்று மேற்கொள்ளப்படலாம் வெளியிடத் தொடர்புகள் பெருகும் கல்வித்துறையிலும் முன்னேற்றம் உண்டு.

கும்பம்: இரக்கசிந்தை மேலிடும் பொதுப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள் பெரிய இடத்துத் தொடர்புகள் ஏற்பட இடமுண்டு கண்ணியமான தினம்.

மீனம்: எவ்விடயத்திலும் நன்ருக ஆலோசித்த பின்பே முடிவெடுக்கவும் ஆணவப் போக்கு மற்றவர்களின்வெறுப்பைத் தேடித்தரும் அவதானம் வேண்டும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## ரூபவாஹினியில் இன்று

மாலை
5-30 நாட்டு வளம் (தமிழ்)
5-35 'கிரேட் ஸ்பேஸ் கோஸ்ரர்' (ஆங்கிலம்)
6-00 தேகாரோக்கிய நிகழ்ச்சி
6-30 உள்ளூர்த் தமிழ் திரைப் படம் 'வாடைக்காற்று'
6-55 செய்திகள் (தமிழ்)
7-15 இஸ்லாமிய நிகழ்ச்சி
7-45 எதிர்கால நிகழ்ச்சிகள்
8-15 செய்திகள் (சிங்களம்)
8-45 உருதுத் திரைப்படம்
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
9-50 திரைப்படத்தொடர்ச்சி
10-30 உலகச் செய்திகள்
10-35 திரைப்படத்தொடர்ச்சி
11-30 நிகழ்ச்சிகள் முடிவு.

## முதலுதவிச் சிகிச்சை முகாம்

(பண்டத்தரிப்பு)

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு ஆலய உற்சவ நாட்களில் திரளும் பெருந் தொகையான பக்தர்களின் நலனை யொட்டி செண். ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படையின் முதலுதவிச் சிகிச்சை முகாம் ஆலய வீதியில் இயங்கவுள்ளது.

முதலுதவியாளர்கள் இரவு பகலாக இம் முகாமில் கடமையாற்று வார்கள் இதற்கான ஒழுங்குகளை செண். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் யாழ் மாவட்ட ஆணையாளர்டாக்டர் சுகந்தன் இன்னு சித்தம்பி மேற் கொண்டுள்ளார்.


## யந்திர வகைகள்
## குத்தகைக்கு வேண்டுமா?

இரும்புகடைச்சல் யந்திரம்
மரக்கடைச்சல் யந்திரம் (LATHE)
புதிய போக்குவரத்து வாகனங்கள்
சலவைச்சாதனங்கள் — வைத்தியசாதனங்கள்
மேலும் கைத்தொழிலுக்குத் தேவையான சாதனங்கள்

1. சொத்துக்களை நிரந்தரமாக்கிக் கொள்ள குத்தகை உன்னத வழி. அத்துடன் உங்கள் தொழிலை விருத்தி செய்ய உங்கள் நடைமுறை மூலதனம் உதவுகிறது.
2. 100% வருமான வரிச்சலுகையை உறுதிப்படுத்துவது குத்தகையே.
3. குத்தகை உங்கள் வருமானத்தை விருத்தியடையச் செய்யும். இதனுல் உங்களுக்குத் தேவையில்லாத பழைய யந்திரங்களை தவிர்த்துக்கொள்ளலாம்.

### த பினன்ஸ் கொம்பனி லிமிட்,

249மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23680


# அரியாலையின் மூத்த கலைஞர்கள்
## மூவருக்கு நடந்த பாராட்டு விழா

(கல்வியங்காடு)

''எமது பழம்பெரும்கலைகளை நாம் பாதுகாக்கவேண்டும்; வளர்க்கவேண்டும். இன்றைய இளந்தலைமுறைக் கலைஞர்கள் எம் அரும்பெரும் பழைய கலைகளை தெரியாதவர்களாக இருக்கும்நிலை மாற்றப்படவேண்டும். எமது பழைய கலைகளில் இருக்கும் சிறப்புக்களை எம்சமுதாயத்துக்கு எடுத்துக்காட்டக் கூடியவர்கள் முதிய கலைஞர்களே. இத்தகைய முயற்சிகளில் ஈடுபட்ட கலைஞர்கள் இன்று நவீனகால கலைகளின் தாக்கத்தால் பின்தள்ளப்பட்ட நிலையில் இருப்பது வருந்தத்தக்கதே. இந்த நிலைமை மாற்றப்படவேண்டும்.

''நமது சமூகம் எம் அரும் பெரும்கலைகளை மீண்டும் அறிய முயலவேண்டும். இந்த கலைத் தொண்டில் ஈடுபட்டுள்ளமுதிய கலைஞர்களை நாம் அவர்கள் உயிருடன் வாழும்போதே கௌரவித்து அவர்கள் மூலம் பழைய எம் கலைகளின் திறமைகளைத் தெரிந்துகொள்ள வேண்டும். இத்தகைய ஒரு முயற்சியாக அரியாலையில் முதுபெரும் கலைஞர்கள் மூவரை இன்று நாம் பாராட்டுகின்ருேம். இவர்கள் மூவரும் நாடறிந்த கலைஞர்கள்.''

இவ்வாறு அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலைய 38வது ஆண்டு விழாவின் முதலாம் நாள் நிகழ்ச்சிகளின் போது கௌரவிக்கப்பட்ட முதிய கலைஞர்களான திருவாளர்கள் வே. ஐயாத்துரை, க. இரத்தினம், கு. கந்தையா ஆகியோரது பாராட்டு விழாவில் பேசுகையில் கலாநிதி சு. மோகனதாஸ் குறிப்பிட்டார்.

நிலையத்தலைவர் ஏ. வீரசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கவிஞர் காரை சுந்தரம்பிள்ளை பேசுகையில் கூறியதாவது:-

''பத்தொன்பதாம் நூற்ருண்டின் பிற்பகுதியில் இசை நாடகங்கள் யாழ்ப்பாணத்தில் அறிமுகமாயின. இந்தியக் கலைஞர்களால் இவை அறிமுகமாயின. ஆங்கிலேயர் ஆட்சியில் தோட்டங்களில் வேலைசெய்ய வந்த இந்திய தமிழ் தொழிலாளர்களின் வருகையால் ஈழத்தில் புதிய கலைகள் அறிமுகமாயின. இசைநாடகங்களின் வருகையால் பாமர மக்கள் அறநெறிகளை அறிய முடிந்தது. கோவில் திருவிழாக்களில் ஆடப்பட்ட நடனங்கள் நாடகங்கள் மக்களின் கலைப்பசியை தீர்த்தன. யாழ்ப்பாணத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் கல்வி கற்கும் வாய்ப்பு இல்லாத காலத்தில் நாடகங்களே அவர்களுக்கு அறிவுதரும் சாதனங்களாக இருந்தன.

ஆரம்பகாலத்திலே நடிகர்கள் சமூக அந்தஸ்தைப் பெற்றிருக்கவில்லை. ஆனுல் இன்று நிலைமை அப்படி இல்லை. ஆயினும் கலைஞர்கள் பொதுவாழ்வில் வறுமை நிலையில் வாழ்பவர்களே. தெற்கில் 'டவர்' மண்டப அமைப்பு கலைஞர்களுக்கு ஊதியம் அளிக்கிறது. இத்தகைய முயற்சி எம் பகுதிகளில் இல்லை. இதுபற்றி உரிய பெரியார்கள் சிந்திக்கவேண்டும்.

இப்படியாக வாழ்ந்துவரும் கலைஞர்களாக முதியகலைஞர்கள் இருக்கிருர்கள். தமது வாழ்வுக்கான இலாபம் ஏதும் பாராது கலைக்காகத் தம்மை அர்ப்பணித்த கலைஞர்களாக இருக்கும் அரியாலையூர் முதிய கலைஞர்களை நாம் இன்று பாராட்டுவது அக்கலைஞர்களுக்கு ஓர் மகிழ்ச்சியைத்தரும் செயலாகும்'' என்ருர்.

திரு. சொக்கன், ப. ஜீவானந்ததாஸ்ஆகியோர்பேசினர்.


## பொதுமக்களுக்கோர் நற்செய்தி!
# கமற் ரான்ஸ்போட் லிமிட்.
## (GAMET TRANSPORT LTD)
### யாழ் / கொழும்பு உல்லாச பஸ் சேவை.

* குளிரூட்டப்பட்ட உறங்கல் இருக்கைகள்
* சௌகரியமான பயணம் வாய்ப்பை இழக்காதீர்கள்! முன்கூட்டியே ஆசனங்களை பதிவு செய்துகொள்ளுங்கள்.

கட்டணம்: ஒரு வழி ரூ. 100/-

27 6 84 புதன்கிழமை (இன்று) மாலை 7 மணிக்கு யாழ்ப்பாணத்திலும்
28 6 84 வியாழக்கிழமை மாலை 7–15க்கு கொழும்பிலும்
எமது சேவை ஆரம்பமாகி தொடர்ந்து தினசரி நடைபெறும்.

புறப்படும் இடங்கள்:

கொழும்பு:
6–30 பி. ப. வெள்ளவத்தை வர்த்தகவங்கி முன்பாக
6–45 பி. ப. கிறீன்லன்ட் ஹோட்டல்
7–00 பி. ப. கோட்டை புகையிரதநிலையம்
7–15 பி. ப. கோமதி விலாஸ், செட்டித்தெரு

யாழ்ப்பாணம்:
6–00 காங்கேசன்துறை
7–00 மாக்பெட் பெற்றோல் நிலையம் (MARKFED)
ஸ்ரான்லி றேட், (லிடோ படமாளிகைக்கு முன்பாக)

கீழ்க்காணும் இடங்களில் ஆசனங்களைப் பதிவு செய்துகொள்ளலாம்:

யாழ்ப்பாணம்:

1, கிறீன்பீல்ட் ரவல் ஒப்பறேற்றர்ஸ், இல. 26, நவீனசந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம். தொலைபேசி: 23875 - 22784
2. நியு. வி. எஸ். எஸ். கே. இல, 348, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி:24020
3, மினிரேட் சென்ரர், இல. 3, ஜே. எம். சி. கட்டடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24331
4. கிருஷ்ணுஸ், கே. கே. எஸ். வீதி, தெல்லிப்பழை.

கொழும்பு:

1. GRANDMET CEYLON LTD. (ஹோட்டல் கிறீன்லன்ஸிற்கு அருகாமையில்) இல. 35 A, சிறிபெரி காடின்ஸ், பம்பலப்பிட்டி. தொலைபேசி: 85832 — 580054
2. காந்தி லொட்ஜ், இல. 200, காலி வீதி, வெள்ளவத்தை. தொலைபேசி: 82720
3. கிறீன்லன்ட்ஸ் ஹோட்டல் லிமிட்டெட், இல. 34, சிறிபெரி காடின்ஸ், பம்பலப்பிட்டி. தொலைபேசி: 81986 and 85592
4. கோமதி விலாஸ் இல. 142, செட்டியார் தெரு, கொழும்பு-11. தொலைபேசி: 34144
5. அஜந்தா ஹோட்டல் லிமிட்டெட், 125, ஒல்கொட் மாவத்தை, புறக்கோட்டை, கொழும்பு-11, தொலைபேசி: 28089

காரியாலயம்: Grandmet Ceylon Ltd.
கொழும்பு: 35 A, சிறிபெரி காடின்ஸ், பம்பலப்பிட்டி-
தொலைபேசி: 85832 — 580054

யாழ்ப்பாணம்: Greenfield Travel Operators
கிறீன்பீல்ட் ரவல் ஒப்பறேற்றர்ஸ்.
இல. 26, நவீனசந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23875 — 22784


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சாந்தி** (யாழ். நகர்)
10-30, 2-30, 6-30
ரஞ்சன்— அஞ்சலிதேவி
**நீலமலைத் திருடன்**
(புதிய பிரதி)

**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி 2-30, 5-30
**மீண்டும் கோகிலா**

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
வீரப்பா — சுமலலதா
**திசைமாறிய பறவைகள்**

**மனோகரா** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-15
4-45, 7-00
Sondra Currie in
POLICE WOMEN
(Color-Karate Film)

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
ரஜனிகாந்
**அன்புக்கு நான் அடிமை**

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
சிவாஜி — மஞ்சுளா
**மன்னவன் வந்தானடி**

**வின்சர்** (யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 6-30
2-வது கடைசி மாதம்
எம்.ஜி.ஆர். ஜெயலலிதா
**ஒளிவிளக்கு**
(புதிய வண்ணப் பிரதி)

**றீகல்** (யாழ். நகர்)
22nd to 1st
10-30, 2-15, 4-30, 6-30
John Hurt....
NIGHT CROSSING
Color

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00, 4-45
7-00
Top entertainment of the Day..
New way of Action
Karate you have ever seen before
SHOGUN'S NINJA
(Color)

**லிடோ** யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி-சரிதா
**துணை**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க பல ஆண்டுகளுக்குப் பின்னர் திரையிடப்படுகிறது.
சிவாஜி-சரோஜாதேவி
எம். ஆர். ராதா
நடித்த
**வளர் பிறை**
[புதிய பிரதி]


# "விளையாட்டுத்துறையில் ஈடுபடவேண்டும்"

(பண்டத்தரிப்பு)

"மதத்தலைவர்கள் தத்துவ ஞானிகள், அரசியல் வாதிகள்போன்று விளையாட்டு வீரர்களும் சமுதாயத்தில் உயர்ந்தவர்களாக விளங்குகின்றார்கள். விளையாட்டுத்துறையில் ஒருவர் பெறும் ஊக்கஉணர்வு அவரது வாழ்க்கையில் பல்வேறு தடைகளையும் தாண்டி முன்னேறும் மனோதிடத்தினை அளிக்கிறது"

மூளாய் இந்து இளைஞர் மன்றத்தின் வருடாந்த விளையாட்டுப்போட்டியில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி அதிபர் திரு. க. அருணசலம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு வே.கருணைகரன் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவிற்கு சிறப்பு விருந்தினராக சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டுப் பொறுப்பதிகாரி திரு கே.அரிச்சந்திரா கலந்துகொண்டார்.

போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு விக்ரோறியாக் கல்லூரி அதிபர் அருணசலம் பரிசில்களை வழங்கினார்.

(சூ)

## கல்வி இலாகா வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ். ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் குழுவுக்கும், யாழ். கல்வி இலாகாக் குழுவுக்கும் இடையில் நடைபெற்ற வருடாந்த துடுப்பாட்டப் போட்டியில் கல்வி இலாகாக் குழுவினர் நாற்பது ஓட்டங்களால் வெற்றி பெற்றனர். இருபது ஓவர்கள் விளையாட்டில் கல்வி இலாகாக்குழு 76 ஓட்டங்களையும், ஸ்கந்தா ஆசிரியர் குழு 36 ஓட்டங்களையும் எடுத்தது. கல்வி இலாகாக் குழுத் தலைவர் திரு எஸ். சந்திரராசாவின் லாவண்யமான பந்து வீச்சைப் பலரும் பாராட்டினர்.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

பருத்தித்துறைக் கல்லூரி வீதியைச் சேர்ந்த விக்ரர் இராசையா செல்வராசாவின் மரணசாதனமில்லாத சொத்து விடயத்தில்,

மரணமெய்தியவர்

செல்வராசா கைம்பெண் இன்பமணி, கல்லூரி வீதி, பருத்தித்துறை.

மனுதார்

வழ. இல: 1204/Testy

எதிராக

1. செல்வராசா தபித்தா பிரபாகினி
2. செல்வராசா இமானுவேல் சுதாதரன்
3. செல்வராசா றயுனு சுதர்மினி
4. செல்வராசா பிறிசில்வா பாமினி யாவரும் கல்லூரி வீதி, பருத்தித்துறை.
5. ஆழ்வாப்பிள்ளை இராசசிங்கம் 330 நாவலர் வீதி நல்லூர் தெற்கு, யாழ்ப்பாணம்.

எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனமில்லாத வழக்கு மேலே குறிப்பிடப்பட்ட இறந்து போன விக்ரர் இராசையா செல்வராசாவின் ஆதனங்கள் மற்றும் சொத்துக்கள் ஆகியவற்றை நிர்வகிப்பதற்காக மேற் சொல்லிய நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள எவரேனும் 1984ம் ஆண்டு ஆடி மாதம் 27ம் திகதி முற்பகல் 9-45 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றான தாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் பணிக்கப்படுகின்றீர்.

1984ம் ஆண்டு ஆனி மாதம் 15ம் திகதி.

**றிச்சேட் ஜெயராசசிங்கம்**
பதிவாளர்

வரைவு
**ஏ.என்.ராமச்சந்திரன்**
மனுதாரின் சட்டத்தரணி

394

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில்

மரணசாதன மில்லாது மரணமெய்திய கைதடிச் சந்தி கைதடி, இளையதம்பி குமாரசுவாமியின் மரணசாதனமில்லாத மரணச் சொத்து விடயமாக:-

மரணமெய்தியவர்

குமாரசுவாமி கைம்பெண் இராசம்மா கைதடிச் சந்தி, கைதடி.

மனுதார்

வழக்கு இலக்கம் 219

எதிராக

1. குமாரசுவாமி மகள் பிரசாந்தி
2. குமாரசுவாமி மகள் கிருசாந்தி
3. குமாரசுவாமி மகன் பிரணவன் யாவரும் கைதடி மத்தி, கைதடி
4. தங்களது வழக்குப் பாதுகாவலர் நாகலிங்கம் தேவபாலசுந்தரம் மூலம் கைதடி தெற்கு, கைதடி.

எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1984-ம் ஆண்டு ஆடி மாதம் 11-ந் திகதி முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றான தாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி
(ஒப்பம்)
**ஆ. குணநாயகம்**
பதிவாளர்

தயாரித்தவர்
(ஒப்பம்)
**ந. கணேசயோகன்**
மனுதாரின் சட்டத்தரணி
இது ஓர் உண்மைப் பிரதி

491

## மென்பந்து கிரிக்கெட் சங்கம்

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களை ஒன்றிணைத்து மென்பந்து கிரிக்கெட் சங்கம் ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளை சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டு உத்தியோகத்தர் திரு இ.சுப்பிரமணியம் மேற் கொண்டுள்ளார்.

யாழ். மாவட்டத்திலுள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் விளையாட்டுத்துறையை ஊக்குவிப்பதற்காக ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கும்விளையாட்டு அமைச்சு 25 ஆயிரம் ரூபா வழங்கியுள்ளதாகவும், இதன் மூலம் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு பல்வேறு உதவிகளையும் வழங்க நடவடிக்கை மேற்கொண்டிருப்பதாகவும் திரு சுப்பிரமணியம் தெரிவித்தார்.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மாவட்ட நீதிமன்றம்
யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணை மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற மயில்வாகனம் ருத்திரபசுபதி என்பவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்து விடயத்தில்
— மரணமடைந்தவர்

வழக்கு இல: தத்துவம்/3534

ருத்திரபசுபதி கைம்பெண் கேதாரகௌரி, 143/4, பிரப்பங்குளம் ஒழுங்கை, வண்ணார்பண்ணை மேற்கு, யாழ்ப்பாணம். — மனுதார்

எதிராக

ருத்திரபசுபதி மகள் விஜயலட்சுமி, 143/4, பிரப்பங்குளம், ஒழுங்கை, வண்ணார் பண்ணை மேற்கு, யாழ்ப்பாணம். — எதிர்வாதி

மேலே இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறித்த காலஞ்சென்றவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்கு மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1981-ம் ஆண்டு ஆவணி மாதம் 1-ந்திகதி முற்பகல் 9-00 மணியளவில் இந் நீதிமன்றத்தில்தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ளபின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றான கட்டளையாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1981-ம் ஆண்டு வைகாசி மாதம் 6ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஒப்பம்
**தா. குலஞானம்,**
பதிவாளர்

வரைந்தவர்:
**கா. ஜெகநாதன்,**
மனுதாரின் சட்டத்தரணி
24-5-84

காரணம் காட்டும் திகதி 6-7-84க்குநீடிக்கப்பட்டுள்ளது.

**கு. குலசிங்கம்,**
பதிவாளர்

496


தெல்லிப்பளையிலும்... யாழ். நகரிலும்...

| | |
|---|---|
| I. D. P. M. (Part I) | ரூ. 550/- |
| COMPUTER PROGRAMMING | ரூ. 1000/- |

**5 மாத சனி, ஞாயிறு, மாலை வகுப்புகள்**
**30-6-84-ல் ஆரம்பமாகிறது.**

செய்முறை:- Commodore, Sinclair, Comp 80 ஆகிய கம்பியூட்டர்களில்

விபரங்களுக்கு:-

TELLI ENGINEERING INDUSTRIES,
K. K. S. Road,
தெல்லிப்பளை.

DIGITAL COMPUTER CONSULTANTS
615, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(குறிப்பு:- 2X81 Computer வாடகைக்குக் கொடுக்கப்படும்.)

521


## இல்லப் போட்டிகள்

(நீர்வேலி)

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரிர்வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி அண்மையில் நடைபெற்றது இப் போட்டியில் அஜந்தா இல்லம் முதலாம் இடத்தையும் கைலாஸ் இல்லம் இரண்டாம் இடத்தையும் சிகிரியா மூன்றாம் இடத்தையும் பெற்றன இப் போட்டியின் போது சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட யாழ்மாவட்ட மேலதிக கல்விப் பணிப்பாளர் திரு. இ. முருகையன், கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி ஆ. வ. தங்கராசா ஆகியோர் சிறப்பு உரை வழங்கினர் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு திரு இ முருகையன் பரிசில்களை வழங்கினார்.

## இன்றைய வானொலியில்

காலை

| | |
|---|---|
| 5.30 | நாதாஞ்சலி |
| 5.35 | தோத்திரமாலை லலிதா சகஸ்ரநாமம் |
| 6.00 | சைவநற்சிந்தனை |
| 6.05 | இஸ்லாமிய நற்சிந்தனை |
| 6.10 | பாமாலை |
| 6.25 | நிகழ்ச்சிமுன்னோட்டம் |
| 6.30 | செய்திகள் |
| 6.40 | அறிவிப்புகள் |
| 6.50 | மெல்லிசைப் பாடல்கள் |
| 7.00 | பாட்டு—ஜோன். பி. உறிக்கின்ஸ்பாகவதர் |
| 7.30 | மாகாணச் செய்திகள் |
| 7.35 | இசையமுதம் |
| 8.05 | வாத்தியவிருந்து |
| 8.15 | முஸ்லீம் நிகழ்ச்சிகள் |
| 8.45 | ஒலிபரப்பு முடிவு |

மாலை

| | |
|---|---|
| 6.00 | செய்திகள் |
| 6.10 | அறிவிப்புகள் |
| 6.20 | இப்தார் நிகழ்ச்சி |
| 6.35 | அருளமுதம் |
| 7.05 | முஸ்லீம் நிகழ்ச்சிகள் |
| 8.00 | உலகச் செய்திகள் |
| 8.10 | களத்துமேடு |
| 8.25 | "நாடகமே உலகம்" ஜி. பி. வேதநாயாம் |
| 8.40 | உதயமஞ்சரி |
| 9.00 | செய்திகள் |
| 9.10 | செய்தியின் பின்னணியில் |
| 9.15 | அறிவிப்புகள் வாத்திய இசை |
| 9.30 | மெல்லிசைப் பாடல் |
| 9.45 | அகில இந்திய வானொலி நிலைய ஒலிப்பதிவு |
| 10.30 | ஒலிபரப்பு முடிவு. |

## பாராட்டு

(மட்டக்களப்பு)

அருட்செல்வி மேரி எரிக்காவின் 25 வருட கால துறவற வாழ்க்கை பலரது நல் வாழ்வுக்கு பயன்படுவதாக அமைந்துள்ளது. இவரது சேவையைப் பெற்ற பலரும் இன்று நல் வாழ்வு வாழ்கின்றார்கள். இவரது சேவை மனப்பான்மையை நாம் பாராட்டுவது மட்டுமல்ல நாம் கௌரவிக்க வேண்டும் என்று மட்டக்களப்பு அர்ச் சூசையப்பர் கன்னியர் மடத்தைச் சேர்ந்த அருட்செல்வி மேரி எரிக்காவின் 25 வருட துறவற வாழ்வையொட்டி ஒழுங்குசெய்யப்பட்ட வெள்ளி விழாவில் கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரி அதிபர் அருட்சகோதரன் மத்தியூஸ் தமது உரையில் குறிப்பிட்டார் அருட்செல்வி மேரி சிசிலியா தலைமையில் இவ்வைபவம் ஒழுங்கு செய்யப்பட்டது.

திருமலை — மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, அருட்செல்வியின் குடும்பத்தினர், கிறிஸ்தவ வண சகோதர, சகோதரிகள் வண பிதாக்கள் உட்பட பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

இவ்வைபவத்தில் அருட் தந்தை சுவாமிநாதன், அருட் செல்வி திரேஷ்ராணி உட்பட பலர் உரையாற்றினர். அர்ச். சூசையப்பர் தேவாலயத்தில் விசேட வழிபாடு பூசையும் நடந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள நடிகர் தற்கொலை!

(கொழும்பு)

பிரபல சிங்களத்திரைப்பட நடிகர் ஆனந்த ஜயரத்தின நேற்று தற்கொலை செய்து கொண்டார்.

தமது மனைவியுடன் ஏற்பட்ட குடும்பத் தகராறு காரணமாகவே இவர் தற்கொலை செய்து கொண்டதாகக் கருதப்படுகிறது.

கொகுவல பெபிலியான என்ற இடத்தில் இச் சம்பவம் இடம்பெற்றது. நடிகர் திரு. ஜயரத்தின தமது உடலில் பெற்ரோலை ஊற்றி நெருப்பு மூட்டி தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

பள்ளி ஆசிரியராகவும், அதிபராகவுமிருந்த திரு. ஆனந்த ஜயரத்ன, சுரத்தள என்ற சிங்களப் படம்மூலம் முதன் முதவில் திரைப்படத் துறையில் இறங்கினுர்.

சந்தேச என்ற படத்தில் ஒரு முக்கிய பாத்திரத்தில் நடித்துப் புகழ்பெற்ருர்.

## உரும்பராய் கற்பகவிநாயகர் உற்சவம்

(யாழ்ப்பாணம்)

உரும்பராய் ஒடயம்பதி கற்பகவிநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் நாளை வியாழக்கிழமை நண்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தொடர்ந்து பதினைந்து தினங்கள் உற்சவம் நடைபெறும். 11ம் திகதி ரதோற்சவமும் 12ம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

## மரணஅறிவித்தல்

### சட்டநாதர் கந்தசாமி

கோப்பாய் தெற்கு கோண்டாவில் வீதியைச் சேர்ந்த இளைப்பாறிய நிலஅளவை திணைக்கள உதவி அத்தியட்சகரும் அனுமதிபெற்ற நிலஅளவையாளருமான சட்டநாதர் கந்தசாமி அவர்கள் 26-6-84 செவ்வாய்க்கிழமையன்று சிவபதமடைந்துவிட்டார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 27-6-84 புதன்கிழமை இன்று காலை 9-00 மணியளவில் நடைபெறும். உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்

இங்ஙனம்
மனைவி, மக்கள்

534

## மரணஅறிவித்தல்

### திருமதி சின்னம்மா முருகுப்பிள்ளை

அச்சுவேலி திருமதி சின்னம்மா முருகுப்பிள்ளை காலமானுர். இவர் இளைப்பாறிய ஆசிரியர் முருகுப்பிள்ளையின் பாரியாரும், திருமதி புவனேஸ்வரி சந்தையனுர் (ஆசிரியை), திருமதி பொற்சிவம்பு இரத்தினசிங்கம், பாலசுப்பிரமணியம் (சுங்க இலகா, கொழும்பு), ஆறுமுகசாமி(ஆசிரியர், நைஜீரியா), நடராசா (அருமைநாயகம் கம்பனி); வைத்தியகலாநிதி வேற்பிள்ளை (அரசினர் வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), சிவசிதம்பரஈசன் (மிருகவைத்தியர், பூட்டான்) ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்ற சந்தையனுர், இரத்தினசிங்கம் (ஜேஏஜன்ட்ஸ்), தேவகி, சரோஜினி, ஈஸ்வரி, வைத்தியகலாநிதி சொர்ணம்பிகை, தேன்மொழி ஆகியோரின் மாமியாருமாவர். அன்னுரது ஈமக்கிரியைகள் இன்று (27-6-84) புதன்கிழமை மாலை மூன்று மணிக்கு இடைக்காடு அச்சுவேலி இல்லத்தில் நடைபெறும்

542

## மரண அறிவித்தல்

### திரு. நாகலிங்கம் நடராஜா

முன்னுள் சந்தை குத்தகையாளராகிய திரு. நாகலிங்கம் நடராஜா காலமானுர். இவர் தெய்வானைப்பிள்ளையின் அன்புக் கணவரும் கமலாதேவி, ஜெயவீரசிங்கம், தவமணிதேவி, சரஸ்வதிதேவி திசைவீரசிங்கம், சந்திரலக்கி, செல்வராணி, ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜோர்ஜ்செவறஸ், தங்கரத்தினம், சுப்பிரமணியம், எபநேசர் தோமஸ், சத்தியபாமா, சகாதேவன், கணேசன் ஆகியோரின் அன்பு மாமனுரும் லோசனுதேவி, தயாளு, நிரஞ்சன், சைவா, தீபன், திலீபன், ஜெயக்குமார், ஜெயசீலன், வனிதா, சசாங்கன், சமீந்திரன் சரீந்திரனி, றஜீனு, சங்கர், சுதாகர், சாமினி ஆகியோரின் அன்பு பேரனுமாவார். அன்னுரின் பூதவுடல் திருநெல்வேலி இல்லத்தில் இருந்து நாளை 28-06-1984 காலை 10 மணிக்கு தகனக்கிரிகைகளுக்காக திருநெல்வேலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

543

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஜூன் மாதம் 27ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49, Telegram Eelanadu, Telephone: 22389 — 24126.

## யாழ். அரச அதிபர் இன்று புறப்பாடு

(யாழ்ப்பாணம்)

அமெரிக்காவுக்கு இன்று புறப்படும் யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையாவுக்கு யாழ். நலன் விரும்பிகள் இன்றுபகல்போசனமளித்து கௌரவித்து, ரயில் நிலையத்தில் வழி அனுப்பிவைப்பார்கள்.

குருநகர் பீச் வீதியிலுள்ள 'யாழ். பீச் இன்' ஹோட்டலில் மேற்படி விருந்துபசாரம் டாக்டர் ஜே.பி.ஸி.பிலிப் தலைமையில் நடைபெறும்.

மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோன், யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் சு. வித்தியானந்தன், யாழ். மாநகர ஆணையாளர் திரு. சீ. வி. கே. சிவஞானம், முன்னுள் மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. எஸ். நடராசா ஆகியோர் உட்படப் பலர், யாழ். அரச அதிபரின் சேவையைப் பாராட்டி உரையாற்றுவார்கள்.

## மாநில சுயாட்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனுதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனுவும் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலியும் இலங்கை அரசு தரப்பிலும்; தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்க் காங்கிரஸ் தலைவர்கள் இலங்கைத் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியும், இந்தியத் தரப்பில் பிரதமர் திருமதி இந்திரா காந்தியும் ஆலோசகர் திரு. ஜி. பார்த்தசாரதியும், இலங்கையிலுள்ள இந்தியத் தூதர் திரு சத்வாலும் நடுவர்களாகவும் இப்பேச்சுக்களில் சம்பந்தப்படலாம் என்று கூறும் அரசியல் அவதானிகள்; மூன்று நாள் விஜயத்தை மேற்கொள்ளும் ஜனுதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனு, இலங்கைத் தமிழர் 'பிரச்னையில் ஓர் சுமுகமான முடிவைக் கண்டு கொள்வதில் தீவிர அக்கறை காட்டுவார் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

புதுடில்லியில் நடைபெறும் ஜனுதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனு — பிரதமர் திருமதி இந்திரா காந்தி சந்திப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்க் காங்கிரஸ் தலைவர்கள் கலந்து கொள்வது சாத்தியமில்லை என்று புதுடில்லிவட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதே நேரத்தில், இந்தியப் பிரதமரின் ஆலோசகர் திரு. ஜி. பார்த்தசாரதியின் யோசனைக்கிணங்கவே கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அமிர்தலிங்கமும் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரமும் இந்தியாவில் நிற்பதாக அறியப்படுகிறது.

புதுடில்லியிலிருந்து வெளியாகும் பத்திரிகைச் செய்திகளின்படி; இவ்வார இறுதியில் நடைபெறும் ஜே. ஆர். ஜெயவர்த்தனு — திருமதி இந்திரா காந்தி சந்திப்பில் இலங்கைத் தமிழர் பிரச்னை சம்பந்தமாக சுமுகமான ஓர் தீர்வு ஏற்படும் என்று தெரியவருகிறது.

மாநில சுயாட்சி அல்லது மாகாண சபை மட்டுமே, மேற்படி உயர்மட்டப் பேச்சுக்களில் வலியுறுத்தப்படும் என்று புதுடில்லியிலிருந்து வெளியாகும் ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கும் அதேநேரத்தில் இலங்கைத் தமிழர் பிரச்னையை எந்த விதத்திலும் தீர்த்துவைக்க வேண்டும் என்று இந்தியா வற்புறுத்தும் என்றும் கூறின.

இப்பொழுது லண்டனில் சுற்று விஜயம் செய்யும் ஜனுதிபதி திரு. ஜெயவர்த்தனு இன்று பிரிட்டிஷ் பிரதமர் திருமதி தட்சரைச் சந்தித்து உரையாடுவார்.

இச்சந்திப்பில் வடபகுதி தமிழ்த் [illegible] தும் ஜனுதிபதி விளக்கமளிக்கக்கூடுமென்று செய்திகள் தெரிவிக்கின்றன.

## பயங்கரவாத..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தோடு ஆயுதங்களும் அவர்களுக்காகச் சேகரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்படுகிறது.

''ஆனல் எமது அரசாங்கம் இதுவரை எந்த நாட்டு அரசாங்கத்திடமும் தாண்டவமாடும் பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டுவர உதவியைக் கோரவில்லை. பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு ஐ. நா. விசேடபடை ஒன்றை ஏற்படுத்த வேண்டும். இவைகள் குறித்து அமெரிக்க ஜனுதிபதி றீகனிடம் விபரமாக எடுத்து கூறியுள்ளேன்.

''இன்று பிரதமர் தட்சருடன் நடக்கும் விருந்துபசாரத்தில் நமது நாட்டுப் பயங்கரவாதப் பிரச்னை குறித்துப் பேசவுள்ளேன்.

## தமிழில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மொழி பேசும் எவருடனுவது தொடர்பை ஆரம்பிப்பாராயின் அவர் தமிழ் மொழியிலேயே அத்தொடர்பை நடாத்தவேண்டும்.

அலுவலக ஆவணம் ஒன்றைச் சட்டப்படி தமிழ் மொழியில் பெற தமிழ் பேசும் ஒருவர் உரிமையுடையவராயின் அவ்வாவணத்தின்பிரதியொன்றை அவர் தமிழ் மொழியிலேயே பெறத் தகுதியுடையவர்.

பொதுமக்களுக்கென வெளியிடப்படும் ஆவணம் ஒன்று அலுவலர் ஒருவரினுல் நிறைவேற்றப்படுமாஞல் தமிழ் மொழி பேசும் ஒருவர் அத்தகைய ஆவணத்தைத் தமிழ் மொழியில் பெற்றுக்கொள்ள உரித்துடையர்

சகல கட்டளைகள், விதிகள், ஒழுங்கு விதிகள், அறிவித்தல்கள், சுற்றறிக்கைகள், படிவங்கள் அனைத்தும் தமிழ் மொழியில் இருத்தல்வேண்டும் கச்சேரிகள், அஞ்சல் அலுவலகங்கள், பொலிஸ் நிலையங்கள், கிராமசேவையாளர் அலுவலகங்கள், உதவி அரசாங்க அதிபர்களின் அலுவலகங்கள், சுகாதார மருத்துவ அலுவலர் காரியாலயங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள் போன்ற பொது தாபனங்கட்கு இவை குறிப்பாக முக்கியமானவையாகும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பொதுப் பதிவேடுகள் பேணப்படுவது தொடர்பாகத் தமிழ் மொழியும் நிர்வாக மொழியாகப் பாவிக்கப்பட வேண்டுமென்னும் நியதி அரசியல் அமைப்பின் 22-வது ஷரத்தின் உட்பிரிவில் உண்டு என்பதற்கும் விசேட கவனம் செலுத்துமாறு வேண்டுகின்றேன். தங்கள் மாவட்டங்களிலுள்ள பொது நிறுவனங்கள் யாவும், அரசியலமைப்பின் இவ்வேற்பாடுகளை அனுசரித்து ஒழுகுவதனை உறுதி செய்யுமுகமாகத் துரித நடவடிக்கைகளை மேற்கொள்வீராயின் நான் மிக நன்றியுடையவனுவேன். இது தொடர்பாக விளக்கமெதுவும் வேண்டியிருப்பின் என்னுடன் கலந்துரையாடுக''.

## சங்கானை வைரவர் உற்சவம்

(சங்கானை)

சங்கானை அரசடி வைரவர் பெருமாள் அலங்கார உற்சவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கொடியேறி, தொடர்ந்து உற்சவம் நடந்துகொண்டிருக்கிறது. எதிர்வரும் 4 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், 5ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடக்கும்.

## இரத்தம் தேவை

நோயாளி ஒருவருக்கு அவசரமாக AB நிகேட்டிவ் பிரிவு இரத்தம் தேவைப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இரத்தம் வழங்க விரும்பும் பரோபகாரசிந்தையுள்ளவர்கள் 24137 டெலிபோன் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளும்படி கோரப்படுகிருர்கள்.

## பஞ்சலிங்கம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லைமப்பரிசில் பெற்று அமெரிக்காவிலுள்ள ஹாவாட் பல்கலைக்கழகத்திற்கு செல்லவிருப்பது தெரிந்ததே. (மா)

## ஐக்கிய நாணய...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்''

''குறைந்தது ஆறு மாதங்கள் தொடர்ச்சியாக சேமிப்பு பணத்தை சமாஜத்தில்செலுத்தும் ஐக்கிய நாணய சங்கங்களின் பிரதிநிதிகளே சமாஜத்தின் நிர்வாக சபையில் இடம் பெறக்கூடிய அளவுக்கு உபவிதிகளில் மாற்றம் செய்யப்பட வேண்டும்''.

## தமிழ்மொழி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லளிக்கையில் உறுதியளித்தார்

யாழ். மாவட்டத்தில் தமிழ் மொழி உபயோகத்துக்கு எந்த ஒரு அரசசார்பு-கூட்டுத்தாபன ஊழியர்கள் பொலிஸ்நிலையங்கள் உட்பட எந்த நிறுவனத்திலும்பிரச்னைகள் ஏற்பட்டால் இதற்கெனப் பொறுப்பாக நியமிக்கப்பட்டிருக்கும் அதிகாரியுடன் நேரடியாகவோ, தொலைபேசி மூலமோ தொடர்பு கொள்ளலாம் என்றும், அவர் அவற்குரிய நடவடிக்கை எடுப்பார் என்றும் திரு. நேசையா தெரிவித்தார்.

யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு. பி. எல். பற்றிக் இது ஷயத்துக்குப் பொறுப்பாக இருப்பார் என்றும், அவருக்கு உதவியாளர்களாக உதவி அரசாங்க அதிபர்கள் திரு. எஸ்.பி. பாலசிங்கமும், திரு கி. கோபாலரட்ணமும் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்றும் அவர் சொன்னுர்.

## மரணஅறிவித்தல்

### சுருவில் துரைச்சாமி

(சமாதான நீதவான்)

சுருவிலூர் சுப்பிரமணியம் துரைச்சாமி சமாதான நீதவானும் கொமிசனருமாகிய இவர் சரஸ்வதியின் அன்புக் கணவரும் மதிவதனி, மேகலா, கிருபாலினி, சேயோன், துஷ்யந்தி ஆகியோரின் அன்புத்தந்தையும், வீரசிங்கம் (புவனேஸ்வரி மெடிக்கல் ஸ்ரோர்ஸ்) காலஞ்சென்ற சிவஞானம், திருமதி மனேன்மணி வைரமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் புதன்கிழமை 27-06-84 இன்று காலை 10-00 மணியளவில் சுருவிலில் உள்ள அன்னுரது இல்லத்தில் நடைபெறும்: உற்ருர், உறவினர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

541

தகவல்: திருமதி து. சரஸ்வதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org